திருக்கோயில்

ஆகஸ்ட் 1991 விலை ரூ. 3

சித்திரபாரதம்
கதை வடிவம்:- செவ்வேள்
படம்: M.N. ராஜா
பன்றி வடிவு கொண்டு பாய்ந்து வரும் மூகனிடமிருந்து அர்ச்சுனனைக் காக்க சிவபெருமான் தான் வேடு வேடத் திருக்கோலம் பூண்கிறார். உமாதேவி வேட்டு வச்சியாக, சிவகணங்கள் வேடுவர் கூட்டமாகின் ஒரு பன்றியினால் தேடிக்காண முடியா- றனர்.
மற்போன கண்ணுதற்கடவுள் அர்ச்சுனனுக்கு அருளும் பொருட்டு தானே ஒரு பன்றியைத் தேடும் புறப்பட்ட திருவருளை என்னென்பது!
தவத்தில் லயித்து நிற்கும் அருச்சுனன் மேல் தன் வாயைத் திறந்து கொண்டு பாய்கிறான் மூகன்
சிவவேடரும், அர்ச்சுனனும் எய்யும் பாணங்கள் ஒரே நேரத்தில் பன்றியின் உடலில் பாய்கின்றன.
எங்கள் தலைவர் குறிவைத்த பன்றியின் மேல் நீ எப்படி பாணம் செலுத்தலாம்
எனைக் கொல்லவந்த பன்றியை நான் கொன்றேன் இது தவறா? பன்றியின் உடலை நீங்களே கொண்டு போய் உண்ணுங்கள். என்னிடம் வீரம் பேசினால் என் வில் பேசும்
பசுத்தோல் போர்த்த புலியே! கோலம் தவக் கோலம். செய்வது கொலைத் தொழில்! நல்ல தவசி நீயாரோ! உன் பெயர் என்னவோ?
வில்லுக்கு விசயன் என்று வையம் போற்றும் அர்ச்சுனனே நான்
ஓஹோ! அன்று எங்கள் ஏகலைவன் வலக்கைப் பெருவிரல் பலி கொண்ட மகா வீரன் அல்லவா நீ?...
பழிச்சொல் பொறாத பார்த்தன் சிவவேடர் மேல் பாணங்களைத் தொடுக்கிறான். சிவவேடரும் இரு பாணங்களால் அர்ச்சுனன் மார்பையும் தோளையும் துளைக்கிறார். அர்ச்சுனன் விடும் ஓர் அம்பு சிவவேடரின் மயிலிறகு மாலையைக் கொய்கிறது.
சிவவேடர் ஒரு பாணத்தால் அர்ச்சுனனின் காண்டீபத்தின் நாணை அறுத்துத் தள்ளுகிறார்.

முகப்பு:

பிள்ளையார்பட்டி

அருள்மிகு கற்பக விநாயகர்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை 33	திருவள்ளுவர் ஆண்டு 2022 பிரஜோற்பத்தி ஆண்டு ஆவணி ஆகஸ்ட் 1991 விலை ரூ. 3-00	மணி : 8

திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

அரை ஆண்டு	—	ரூ.	18-00
ஓர் ஆண்டு	—	ரூ.	36-00
ஆயுள்	—	ரூ.	300-00

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் அனுபவங்கள்
— திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

விநாயகர் சதுர்த்தி
— கயப்பாக்கம் சோமசுந்தரனார்

ஆடல் காணீரோ, திருவிளையாடல் காணீரோ
— கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

கூர்மாவதாரம்
— ஜெயஸ்ரீ மூகாம்பிகை

அட்ட வீரட்டத் திருத்தலங்கள்
— டாக்டர் சிவப்பிரியா

திருமழிசை அருள்மிகு ஒத்தாண்டேசுவரர் ஆலயம்
— டாக்டர் தேவராஜன் எம்.பி.பி.எஸ்.

இறையடி சேரும்வழி
— கோவைக்கிழார்

ஆளுடைய அடிகள் அணிமணிமாலை
— அருள்விளக்கம் அண்ணாமலைஅடிகள்

கந்தவேள் கருணை
— டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

செல்வம் செழிப்பித்த தாலி
— அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

ஞானக் குழந்தை
— டாக்டர் இரா. நாகசாமி

கம்பரின் இராமாவதாரம்
— டாக்டர் த. அமிர்தலிங்கம்

சித்திர பாரதம் —செவ்வேள்

''மாண்புமிகு முதல் அமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி''

அருளாளர்களின் அருள் அனுபவம்



திருமந்திரச்செம்மல் டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

திருமிகு தலைமைச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை-600 009

திருமந்திரச் செம்மல்
திருமிகு டி.வி.வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ். அவர்கள்

(4)

1. திருக்கூத்து கண்ட அடியார்கள் தவத்தினால், யோகத்தினால், அறிவால், எல்லையில்லாத அன்பினால் உயர்ந்த நிலையை அடைந்த பிறகு விவரிக்கவொண்ணாத ஒரு அனுபவத்தினைப் பெற்று வாழ்வார்கள். அந்த அனுபவத்திலேயே மூழ்கி வாழும் இறை உணர்வாளர்களுடைய மனநிலையை விளக்குவது கடினமாகும். இவர்கள் புறக்தோற்றத்தில் மற்றவர்களைப் போலவே இருந்தாலும் அகத்திலே ஏற்பட்ட அனுபவத்தால் திரையற்ற நீர்போல் சிந்தை தெளிந்தவர்கள். படிப்பினால் மட்டும் அறிவினை வளர்த்து தத்துவங்களிலே மூழ்கியவர்களாக ஆன்மீகத்தை ஏட்டளவில் புரிந்து கொண்டு அதைப் பேசிப் பேசி பிறரை மயக்குபவர்கள் அல்லர். அவர்கள் பேரறிவு பெற்றவர்கள், ஜீவன் முத்தர்கள். இவ்வுலகிலும் இறையுணர்வோடு கலந்து வாழ்பவர்கள். அன்பும் கருணையும் அவர்கள் உள்ளங்களில் ஆற்று வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடும். சித்து அசித்து, உண்மை இன்மை, அறிவு அறியாமை, இன்பம் துன்பம் இவற்றிற்கான வேறுபாடுகளை நன்கு உணர்ந்து, உள் தெளிந்து திருவடியே தஞ்சமாகி, பிறப்பையும் இறப்பையும் வளர்க்கும் மும்மலங்களின் ஆட்டங்களில் இருந்து விடுபட்டு என்றும் தங்கள் மனதிலும் உணர்விலும் இறைவனுடன் கலந்து, தான், நான் என்கிற நினைவும் மறந்தவர்களாக வாழ்வார்கள். இவர்களைத் திருமூலர் ''சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்'' என்று அழைக்கின்றார். முதன்மைக் கடவுளுடைய விளக்கம் நாதம். அந்த நாதத்தின் முடிவை தம்முள் உணர்ந்து குற்றமற்ற தூய்மையான இன்பத்தில் எல்லா தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட நிலையில் இறையுணர்வாளர்கள் பேரின்பத்தில் திளைத்தவர்களாக மக்கள் அனைவருக்கும் அவ்வின்பத்தை பகிர்ந்தளிக்க வல்லவர்கள்.

''சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்
சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முள்கொண்டோர்
நித்தர் நின்மலர் நிராமயர் நீள்பர
முத்தர்தம் முத்தி முதல் முப்பத்தாறே''.

2. ஐம்புலன்கள் உயிருக்கு அனுபவங்களைச் சேர்த்துக் கொண்டே இருக்கின்றன. அவற்றால் மக்கள் பெறுவது சிற்றறிவு ஆகும். அந்த சிற்றறிவை 'ஆமேவு பால் நீர் பிரிக்கின்ற அன்னம் போல்' பேரறிவில் இருந்து பிறவிக்குக் காரணமான கன்ம நிலையில் இருந்து விடுவித்துக் கொண்டு தவயோகத்தில் புக்கு தன்னொளி பெற்று இறைவன் உலகெங்கும் தானாக உள்ள உண்மைநிலையினை இறை உணர்வாளர்கள் தங்களுடைய பெரு வெளியிலேயே உணர்ந்தவராவார்கள். அதே நேரத்தில் வாழ்வையும் வாழ்வதன் அனுபவத்தையும் அவர்கள் தள்ளிவிடுவதில்லை. அவற்

றையே இறைவனின் தன்மையை வெளி காட்டும் ஏணிகளாக மாற்றி அந்த ஏணிகளில் படிப்படியாக ஏறி, ஒப்பில்லாத ஆனந்தத்தைப் பெற்று விவரிக்க இயலாத இறைவனையும் தம்முள் கண்டு வாழ்கின்றார்கள். அந்தத் திருமந்திரத்தைப் பாருங்கள்.

''முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பில்லாத ஆனந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவங்கண்டு தெளிந்தப்
பரிசாக அமர்ந்திருந்தாரே''

3. இறையனுபவம் அவர்கள் உள்ளத்தில் பரவி நிற்பதாலும் பரம்பொருள் எங்கும் நிறைந்திருப்பதாலும் இறையுணர்வாளர்களுடைய மனநிலை எல்லையற்ற கடல்போல விரிந்து நிற்கும். எல்லாம் இறைவன் செயல் என்பதை எப்பொழுதும் மனதில் கொண்டிருப்பர். காலத்திற்கு அப்பாற்பட்ட இறைவனுடன் அவர்கள் கலந்து இருப்பதால் அவர்கள் முக்காலத்தின் இயல்பையும் நன்கு உணர்ந்தவர்களாகின்றனர். இந்த நிலையில் இருக்கும் இறையுணர்வாளர்களின் தன்மையை ''இழவு வந்து எய்திய சோம்பே'' என்கிறார் திருமூலர். தன்நினைவு இழந்த நிலை இழவாகும். சோம்பல் என்பது பந்தபாசங்களை விலக்கி மனத்தை ஒடுக்கி இறைவனுடன் முழுவதும் கலந்த நிலையாகும். இதுபற்றிய திருமந்திரம் பின்வருமாறு:

''இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே''.

இறையுணர்வாளர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் தங்களுடைய மனவெளியிலே இறைவனுடைய எண்ணம் கலந்தவர்களாக- தூய்மை உள்ளம் கொண்டவர்களாக வாழ்வர். ஐம்புலன்கள் தூண்டும் உணர்ச்சிகள் அவர்களை அணுகா. தான் என்கின்ற ஆணவ மனப்பான்மை அவர்களிடம் இருந்து ஓடி மறைந்துவிடும். மனதில் எழும்பும் பலவகையான எண்ண அலைகள் படிப்படியாக குறைந்து முழுமுதற் கடவுளின் தன்மையாகிய ஒலியையும், ஒளியையும் தம்முள் சதா அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். இந்த நிலையைத் திருமந்திரம் தூக்கம் என்று அழைக்கின்றது. தூக்கம் என்பது வெறும் கண் உறங்குதல் மட்டுமல்ல. உறங்குதல் உடலைப்பற்றியது. உறங்கும் பொழுது உடலைப் பற்றிய கருவிகள் ஓய்வு பெறும். ஆனால் இறையுணர்வாளர்கள் அடையும் நிலை மனமும் மற்ற எல்லாக் கருவிகளும் ஒடுங்கி, சித்தம் உறங்கி இறைவனின் உணர்வு மட்டும் இதயத்தில் தங்குகிறது. இந்த நிலையைத் தாயுமானவர் ''தூங்காத தூக்கமது தூக்கம் பராபரமே'' என்று அழகாக வருணிக்கிறார். மனமும் சித்தமும் மற்ற அந்த கரணங்களும் ஒடுங்குவதாலேயே இறையுணர்வாளர்கள் என்றும் ஒப்பற்ற யோக நிலையில் தங்கிப் பேரின்பத்தை அடைகிறார்கள்.

''தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக் கண்டார்சிவ யோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார்சிவ போகமும் தம்உள்ளே
தூங்கிக்கண்டார் நிலைசொல்வ தெவ்வாறே''

4. திருமூலர் அத்தகைய நிலையைப் பெற்றிருந்தார் என்பது பல மந்திரங்களில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இறையறிவும் இறையாற்றலும் சேர்ந்து திருக்கூத்து நடைபெறும் இடமாக அவருடைய உள்ளம் அமைகின்றது. இதையே பொதுமன்றம் என்று சித்தர் வழங்குவர். தம்முள் இந்த ஒலி, ஒளி அசைவுகளை இறையுணர்வாளர்கள் அனுபவிக்கும்பொழுது பல வண்ணங்களின் எழில்களாக தரிசிக்கின்றனர். அவற்றைத் தரிசித்துத் தொழுது பெறும் பேறு எத்தகையது என வெறும் சொற்களால் விவரிக்க இயலாது.

''மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறு பெற்றாரே''

இறையுணர்வாளர்கள் சமயக் கோட்பாடுகளுக்கு அப்பாலும் அவற்றின் உள்ளும் புறமும் இருக்கக்கூடியவற்றை ஆராய்ந்து பார்க்கக் கூடிய ஆன்மீக வலிமையை தங்கள் தவத்தால் யோகத்தால், அறத்தினால், அன்பினாலும் பெறுகின்றார்கள். அந்த வலிமையைப் பெற்றவர்கள் உண்மையை நோக்குகிறார்கள். உண்மையின் கருத்தினை தம்முள் உணர்கின்றார்கள். உணர்ந்த பிறகு மாறுபட்டவர்களாகி அந்த உண்மையைப் பிறருக்கு எடுத்துக் கூறுகின்றார்கள்.

5. இறையுணர்வாளர்கள் அடையும் நிலை பாசத்தைக் கடந்த நிலையாகும்; மனம் வாக்கு காயத்தால் மூளும் வல்வினையைக் கடந்த நிலையாகும். எல்லாம் தெரியும் அறிவுதனை அறிந்த பிறகு இவர்கள் தங்களுடைய சாதனையைப் பற்றி பேசிப் பிதற்றிக் கொண்டிருப்பதில்லை. பிறவிப் பயன் முழுவதையும் பெற்றடைந்து தான் பெற்ற பேரறிவின் காரணமாக எஞ்சி நிற்கும் கன்மங்களையெல்லாம் எடுத்துவிட்டு, மேல்வரும் வல்வினை தங்களை நெருங்காத வண்ணம் தூய வாழ்வினை மேற்கொண்டவர்களாக இறையருள் எப்பொழுதும் தங்கள் சிந்தையிலே விளங்கும் நிலைபெற்றவர்களாக இவர்கள் வாழ்கின்றார்கள். அப்பேர்ப்பட்டவர்களை 'தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்' என்று திருமூலர் அழைக்கின்றார். இறைவனுடைய அருளும் அவர்களுடைய ஆற்றலும் பின்னி நிற்கும்நிலையாகும். இந்த நிலையைத் திருமந்திரம் பின்வருமாறு விளக்குகின்றது.

''தன்னை யறிந்திடும் தத்துவ ஞானிகள்

முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்

பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்

சென்னியில் வைத்த சிவனருளாலே.''

6. இது மௌனத்தில் ஒடுங்கும்நிலையாகும். தம்முள் இருக்கும் சக்தியை அறிந்தவர்களுக்கு மலமில்லை, மாசில்லை, மான அவமான மில்லை, குலமில்லை. உயிர்களுடன் பற்றி நிற்கும்குணவிசேசங்களும் இல்லை. நலனில்லை கேடில்லை, பிரம்மன் போன்ற கோடிக்கணக் கான தேவர்கள் கூட பாசத்தால் கட்டப்பட்ட நிலையும் இல்லை. இறையுணர்வாளர்கள்நிலை கடவுள் நிலையாகும். இறைவனுடன் பொருந்திய பிறகு கிடைக்கக்கூடிய நிலை இது. இந்த நிலையில் இருந்த திருமூலர்

''ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்

கழிந்தேன் கடவுளும் நானுமொன்றானேன்

அழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன்

செழுஞ்சார்புடைய சிவனைக் கண்டேனே''

என்கின்றார்.

மக்கள் அன்றாட வாழ்வில் உலகத்தோடு இணைந்து வாழ முற்படுகின்றார்கள். அவ்வழி யாக இன்பமடையப் பார்க்கின்றார்கள். இதில் வியப்பொன்றில்லை. பிறந்த பிறகு சமூகத் தினருடன் ஒத்து வாழ்தல் மூலமாக கிடைக்கக் கூடிய லௌகீக பயன்களைப் பெற்றுத் தீர்வ தற்கே சீவன் முற்படுகின்றது. அவ்வாறு இல்லாவிடில் பிறப்பின்நோக்கம் நிறைவேறாது. ஆனால் அந்த நிலையில் என்றுமேஇன்பத்தைத் தொடர்ந்து பெற்றிருக்க முடியாது. இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்து கொண்டேயிருக் கும். அதை அறிந்துகூட மக்கள் 'இச்சையுளே வைப்பர்'. சற்று சிந்தித்துப் பார்க்கும்பொழுது இவையெல்லாம் தேவையற்றது என்று புரிந்து கொள்ள முடிந்தாலும் வலுவான பாசத்தால் கட்டுப்பட்ட மக்கள் நிலையான பேரின்பத் தைப் பெற இயலுவதில்லை. ஆனால் ஒரு நாள் உண்மையில் எல்லா சீவன்களும் உயர் வதற்கான வழியினை இறைவன் நமக்குக் காட்டுகின்றான். அருளினால் நமக்கு அந்த நேரம் கிட்டும் பொழுது இனி உலக அனு பவங்கள் தேவையில்லை என்கின்ற முடிவு தோன்றுகின்றது. மனச்சேட்டைகள் அடங்கு கின்றன. பிறவித் துயரைக் கொடுக்கும் அறிவு மாறி, அகத்தில்பேரொளிபுலப்படத்தொடங்கு கின்றது. வாழ்க்கையின் உண்மையான நோக் கம் அகக்கண்களுக்கு விளங்கத் துவங்குகிறது. நிலையான நெறி ஒன்றினை மனம் பற்றிய பிறகு அதனால் ஏற்படும் பெரும் பேற்றினை மனம் அடைகின்றது. இந்தச் சாதனையைச் செய்த இறையுணர்வாளர்கள் உலகுடன்

நாம் அழகாவது எப்போது?

வீடு அழுக்கின்றி இருந்தால் போதாது.
துணி அழுக்கின்றி இருந்தால் போதாது.
உடல் அழுக்கின்றி இருந்தால் போதாது.
நம்மனம் அழுக்கின்றி இருத்தல் வேண்டும்.

—ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

பேசாப் பெருமையைப் பெறுவர். திருமந்திரம் இதைப் பின்வருமாறு விளக்குகிறது.

''பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி

பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்

பெற்றார் அம்மன்றிற் பிரியாப் பெரும் பேறு

பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே''

7. இத்தகைய பேறு பெற்ற இறையுணர் வாளர்கள் ஜீவன் முத்தர்கள் என்று அழைக்கப் படுகிறார்கள். இந்தப் பிறப்பிலேயே அவர்கள் பிறவாப் பயனைப் பெற்ற பின்னர் மற்ற உயிர்களை மற்ற இதயங்களை புறக்கணித்து விட்டு வெறுமனே தங்களுடைய வாழ்நாட் களைக் கழிப்பதில்லை. எங்கும் நிறைந்து எங்குமிருக்கும் நெடுஞ்சுடரை தம்முள் காணும் இறையுணர்வாளர்கள் பிறருடைய உள்ளங் களிலும் காண்கின்றார்கள். வேற்றுமை என் னும் மாயைத்திரை அகன்ற பின்னர் தம்முள் எல்லா சீவ ராசிகளையும் தம்மையும் காண் கின்றார்கள். உயிர்களிடத்து அன்பும், கருணை யும், பாசமும், பரிவும் உருக்கமும் தயவும் தோன்றுகின்றன. மக்களிடம் இருந்து ஒதுங்கி விடாது அறம் செய், அன்பு கொண்டவனாய் இரு, அன்பு செய்வாரை சிவன்அறிவன் என் றெல்லாம் திருமூலர் திருமந்திரத்தில் அழகாக போதிக்கின்றார். நாட்கள் கழிந்து கொண்டே போகின்றன. யாக்கை நிலைப்பதில்லை. அறம் செய்வதன் மூலம் இறைவனுடைய கழலடியைக் காணலாம் என்பதுஇறையுணர்வாளர்களுடைய துணிபு, பிறரிடம் அன்பு செலுத்துவதன் மூலம் இறைவனை அடையலாம் என்பதும் அவர் களுடைய கொள்கையாகும். அன்பு கொண்ட இதயம் இறைவனை அடைகின்றது; எல்லா உயிர்களிடமும் அன்பினைச் செலுத்தினாலே போதுமானது என்பதும் இறையுணர்வாளர்கள் கண்ட உண்மையாகும்.

திருமூல நாயனார் ஒரு ஒப்பற்ற இறை யுணர்வாளராக திகழ்கின்றார். அவர் அருளிச் செய்த திருமந்திரம் இறையுணர்வாளர்கள்மன நிலையை தெளிவாக விளக்குவதன் மூலம், அவர்கள் புரிந்த சாதனையை நாம் எல்லோ ரும் புரியத் தகுதி பெற்றவர்கள் என்பதையும் சிறப்பான முறையில் எடுத்துக் கூறுகின்றது.

(தொடர்ந்து வரும்)

விநாயகர் சதுர்த்தி

'சித்தாந்தவித்தகர்' கயப்பாக்கம் சோமசுந்தரனார்

திருச்சிற்றம்பலம்

''என்னை நினைந் தடிமைகொண்டென்
விடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் புன்னை
விரசுமகிழ் சோலை வியனாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்தி முகத்தான்.''

திருச்சிற்றம்பலம்.

— நம்பியாண்டார் நம்பிகள்

தோற்றுவாய்

விநாயகர் (வி, நாயகர்) என்றால் தனக்கு மேல் ஒரு தலைவரில்லாதவர் என்று பொருள். இவர் தம் திருமேனி ஞானமயமானது. தன்னை பக்தி சிரத்தையுடன் வழிபடும் அன்பர்களுக்கு நாளும் அருளை வழங்கிவரும் வள்ளல் எங்கும் நிறைந்துள்ளவர். எல்லாப் பொருள்களிடத்தி லும் கலந்து நிற்பவர். இவர் தம் தோற்றம் எப்படி? இவரை வழிபடுவது எப்படி? இவ ருக்குரிய விரதங்கள் யாவை? அவற்றை எப்படி அநுட்டிப்பது? அநுட்டித்துப் பேறுபெற்றார் யார்? என்பது முதலான கேள்விகளுக்கு விடை யளிப்பதே இச்சிறு கட்டுரையின் நோக்கம்.

விநாயகர் தோற்றம்

விநாயகர் தோற்றத்தை விரித்து விளக்கும் புராணங்கள் பல. வரலாறுகளும் பலவகை. இரண்டொன்றை மட்டும் இங்கு விளக்கலாம்.

(1) பரமேசுவரனும் பார்வதி தேவியாரும் ஒரு சமயம் திருக்கயிலையில் மந்திரங்கள் எழுதி யிருந்த மண்டபத்தைச் சார்ந்தனர். அங்கே எழுதப் பெற்றிருந்த பிரணவத்தைக் கண்ணால் கண்டனர். சமஷ்டிப் பிரணவம் பிரிந்து ஆண்ட வன் எழுத்தாகிய ''அகரம்'' ஆண் யானை யாகவும், அம்மை எழுத்தாகிய ''உகரம்'' பெண் யானையாகவும் மாறின. இரண்டும் சேர்ந்தனபோற் காட்சியளித்தன. யானை முகத்தோடு கூடிய விநாயகர் தோன்றினார்.

— காஞ்சிப் புராணம்.

(2) திருக்கயிலை நந்தவனத்திலிருந்த சித்திர மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப் பெற்றிருந்தது. அதனை உமாதேவியார் உற்று நோக்கினர். பிரணவம் களிறும் பிடியுமாக மாறிப் புணர்ந்தன. விநாயகர் திருவவதாரம் செய்தனர்.

அக்கணத் தாயிடை ஐங்கரத் தவனருள்
முக்கணல் வாயினான் மும்மதத் தாறுபாய்
மைக்கருங் களிறெனும் மாமுகத் தவன் மதிச்
செக்கர்வார் சடையனோர் சிறுவன்வந்
தருளினான்'

— கந்தபுராணம் தட்சகாண்டம்.
கயமுகன் உற்பத்திப் படலம் 148

திருஞான சம்பந்த சுவாமிகள் இதனை யொட்டி யருளிச் செய்த திருப்பாட்டு இவ் வற்புதத்தை யாதரிக்கும்.

திருச்சிற்றம்பலம்.

''பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே''

திருச்சிற்றம்பலம்.

[ஆண் யானையும், பெண் யானையும் கூடின என்பதும், சிவம் சக்தியுடன் கூடியது என்பதும், அகர உகரங்களாகிய சிவமும் சக்தி யுங் கூடிச் சுத்த மாயா காரியமாகிய நாதப் பிரணவம் ஆயிற்று என்ற தத்துவத்தை விளக்க வந்த உண்மையே தவிர வேறொன்றில்லை.]

திருவுருவ விளக்கம்

விநாயகருக்கு யானை முகமும், மூன்று கண்களும், இரண்டு செவிகளும், ஐந்து கரங் களும், பெரிய வயிறும், இரு குறுகிய திருவடி களும் உண்டு. யானை முகம் பெருமான் பிரணவ வடிவினன் என்பதை விளக்கும். ஐந்து கரங்கள், தானே ஐந்து தொழில்களையும் செய்பவன் என்பதனை விளக்கும். மூன்று விழிகள் சூரிய, சந்திர, அக்னிகளை உணர்த் தும். விசாலமான இரண்டு செவிகள், ஆன்மாக் களை மலவாதனை தாக்காமல் காத்து வினை வெப்பத்தைப் போக்கியருளும் என்னும் உண் மையை உணர்த்தா நிற்கும். பெருவயிறு

எல்லா அண்டங்களும், உயிர்களும் தன்னுள் அடங்கியுள்ளன என்ற தத்துவத்தை விளக்கும். யானை முகம் பார்க்கப் பார்க்க ஆசையை உண்டுபண்ணும். எனவே, ஆன்மகோடிகள் எத்தனை முறை சுமுகனைப் பார்த்தாலும் சலிப்படையார்கள் என்பதை உணர்த்தும்.

இவரது பழமை

வேதங்களுள் 'ருக்' வேதம்தான் மிகப் பழமையானது. அதில் 'கணானாத்வாம் கணபதிம் அவாமஹே' என்று கணபதி பேசப் படுகிறார். சிலர் இப்பெயர் தேவர்களுக்குள் உள்ள 18 வகையான கணங்கள் தலைவனான இந்திரனைக் குறிக்கும் என்பர். ஆயினும் அவ்வேதம் எவ்விடத்திலும் இந்திரனைக் கணபதியாகப் பேசவில்லையாதலால் அது அவனைக் குறிக்காது. கணங்களுக்குத் தலைவர் கணபதி. இவர் 'பிரமணஸ்பதி' என்றழைக்கப்படுவார் தைத்ரீய ஆரண்யகத்தில் இறைவனைத் ''தந்திந்'' என்று கூறப்பட்டுள்ளது. இதன் பொருள் ''தந்தத்தை உடையவர்'' என்பதாம். ஆகவே, இச்சொல் விநாயகரையே குறிப்பது என்னலாம். கணபதி காயத்ரி மந்திரத்திலும் 'தந்நோ தந்திந் பிரசோதயாத்' என்று ''தந்திந்'' என்று பெயர் குறிப்பிட்டிருப்பதால் இதன் பழமையைக் குறிக்கும். இவ் விநாயகர் பழமையான தெய்வமேயாம் என்பதற்கு இன்னும் பல சான்றுகளுண்டு. சிலர் விநாயகர் வழிபாடு நம் தமிழ்நாட்டில் 7 ஆம் நூற்றாண்டிற்குப் பின் தோன்றியது என்பர். அது பொருந்தாது.

இவருக்குரிய விரதங்கள்

இப்பெருமானுக்குரிய விரதங்கள்மூன்று. ஒவ்வொரு வாரத்தில் வரும் வெள்ளிக்கிழமையும், விநாயக சஷ்டியும் ஒவ்வொரு மாதத்திலும் வரும் வளர்பிறைச் சதுர்த்தியும் சிறப்பாக ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியுமாம். இதனையே மக்கள் மிக முக்கியமாக உலகம் எங்கும் 'விநாயக சதுர்த்தி' என்ற பெயராலும் வழங்கி வழிபட்டு வருகிறார்கள் என்பது உலகமறிந்த உண்மை. ஏன்?

ஒரு சமயம் உமாதேவியாரே விநாயக மந்திரமாகிய ஏகாட்சர மந்திரத்தை உபதேசமாகக் கேட்டு விநாயகரை உபாசித்து வந்தார். அது சமயம் விநாயகப் பெருமானும் ஆறு திருக்கரங்களோடும், யானை முகத்துடனும், வெண்ணிறமான குழந்தையாகப் 'பாலசந்திர விநாயகர்' என்ற திருநாமத்துடன் அம்மைக்கு மகனாகத் தோன்றினார். அந்நாள் ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியும், விசாக நட்சத்திரமும், சோமவாரமும் சிம்ம லக்கினமும் கூடிய நன்னாள். ஆதலால்தான் இம்மாதத்தில் வரும் சதுர்த்தி விசேஷமானது என்று கூறப்பட்டது.

வழிபாடு

விரதானுட்டானம் செய்ய வேண்டியவர்கள் விநாயக சதுர்த்தியன்று புற்று மண்ணினால் விநாயகப் பெருமான் திருவுருவத்தை அமைத்து, அதில் அப்பெருமானை மந்திரத்தால் எழுந்தருளியிருக்கச் செய்து, அலங்காரஞ் செய்து பல நிவேதனப் பொருள்களை அவன் முன் வைத்துப் போற்றி அப் பெருமானைத் துதித்தல் முக்கிய வழிபாடாகும். விநாயகர் அகவல் பாராயணத்திற்கு உகந்தது. அப் பெருமானுக்குரிய மலர்கள்; கொன்றை தும்பை, வன்னி எருக்கு, அறுகு, முதலியனவாம். நிவேதனப் பொருள்களுள் முக்கியமானவை வாழை, மா, பலா, கரும்பு, அப்பம், மோதகம் (கொழுக்கட்டை) எள்ளுருண்டை, அவல் பொரி, விளாம்பழம் முதலியனவாம். பெருமானை விரத நாளன்று இவ்வகையாக வழிபட்டு மறுநாள் உத்வாசனம் செய்து அவ்வுருவத்தைப் புண்ணிய நதியிலோ அல்லது ஒரு குளத்திலோ விட்டுவிட வேண்டியது. இருக்க வேண்டுமென்று விரும்பினால் அடுத்த மாத சதுர்த்தி அல்லது அடுத்த வருட சதுர்த்தி வரையில் வைத்து வழிபட்டுப் பின்னர் உரிய இடத்தில் மேற்சொன்ன வகையில் சேர்த்துவிட வேண்டியது.

விநாயகர் வகை

நூல்களால் இவரது திருவுருவங்கள் 32 வகை என அறிகிறோம். பால கணபதி, தருண கணபதி, பக்தி கணபதி, வீர கணபதி, சக்தி கணபதி, துவிஜ கணபதி, சித்தி கணபதி, உச்சிஷ்ட கணபதி, விக்ன கணபதி, சிப்ர கணபதி ஏரம்ப கணபதி, லட்சுமி கணபதி, மஹா கணபதி, விஜய கணபதி, நிருத்த கணபதி, ஊர்த்துவ கணபதி, ஏகாட்சர கணபதி, வர கணபதி, திரயாட்சர கணபதி, சிப்ரபிரசாத கணபதி, ஹரித்ரா கணபதி, ஏகதந்த கணபதி சிருஷ்டி கணபதி, உத்தண்ட கணபதி, ரணமோசன கணபதி, துண்டி கணபதி, துவிமுக கணபதி, மும்முக கணபதி, சிங்க கணபதி, போக கணபதி, துர்க்கா கணபதி, சங்கடஹர கணபதி என்பனவாம்.

விநாயகர் அர்ச்சனைக்குரிய சோடசநாமங்கள்

ஓம் சுமுகாய நம:
,, ஏகதந்தாய நம
,, கபிலாய நம:
,, கஜகர்ணிகாய நம:
,, லம்போதராய நம :
,, விகடாய நம:
,, விக்னராஜாய நம :
,, விநாயகாய நம :
,, தூமகேதவ நம:
,, கணாத்யட்சாய நம:
,, பாலசந்திராய நம:
,, வக்ரதுண்டாய நம:
,, சூர்ப்பகர்ணாய நம:
,, ஏரம்பாய நம:
,, ஸ்கந்தபூர்வஜாய நம:
,, மஹாகணபதியே நம:

கம்பன் கவிநயமணி

வே. தியாகராஜன்

(11)

வீரபாண்டியன் என்பவன் மதுரையை அரசாட்சி செய்து வரும் காலத்தில் அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவ்வீரபாண்டியனுக்கு பட்டமகிஷியைத் தவிர அனேக காமக்கிழத்தியரும் உண்டு. அவர்களிடமும் அவனுக்கு அனேக மக்கள் தோன்றினர். ஒரு சமயம் வீரபாண்டியன் வேட்டைக்குச் சென்றபோது ஒரு புலி அவனைக் கொன்றுவிட்டது. அனைவரும் வருத்தம் அடைந்திருந்தபோது, காமக்கிழத்தியரின் மக்கள் எல்லாவற்றையும் கொள்ளை அடித்துக் கொண்டு சென்றுவிட்டனர்.

அரச குமாரனைக் கொண்டு மந்திரிகள் அரசனுக்கு ஈமக் கடன்களைச் செய்து முடித்த பின், அரண்மனையின் பொக்கிஷத்தைத் திறந்து பார்த்தபோது, அரசனது நவரத்தினக் கிரீடம் உள்பட யாவும் கள்வர்களான காமக்கிழத்தியரின் மக்கள் எடுத்துச் சென்றதுஅறிந்து வருந்தினர். ''வேறு மகுடம் செய்யலாமென்றாலோ பொருளில்லை. என்ன செய்வோம்?'' என ஏங்கிய மந்திரிகள் கவலையுடன் அரச குமாரனை அழைத்துக் கொண்டு கோயிலை அடைந்தனர். (பழைய காலத்தில் கவலையிருந்தால் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி மனச் சாந்தி பெற்றனர். தற்காலம் மனச்சாந்தியை நாடி சினிமா காட்சிக்குச் செல்கின்றனர். துன்பியலான படங்களைப் பார்த்து அழுது தலைவலியுடன் கண்சிவக்க வெளிவருவர். துன்பத்தைத் தீர்த்துக் கொள்ள மேலும் துன்பத்தையை அனுபவிப்பது காலத்தின் கோலம் போலும்!) கோயில் கோபுரத்திற்குப் பக்கத்தில் வந்தபோது பாண்டி நாட்டாரின் குலதெய்வமான இறைவன் ஒரு மாணிக்க வியாபாரியின் வேடம் பூண்டு எதிரில் தோன்றினார்.

'பொன்னவிர்ந்து இலங்கு கோபுரமுன்
போதுவார்
முன்னவர் துனிவுகூர் முன்ன நீக்கிய
தென்னவர் குலப்பெருந் தெய்வமாகிய
மன்னவர் வணிகராய் வந்து தோன்றினார்''.

அவ்வாறு தோன்றியவர் ''ஏன் துன்பமுற்றிருக்கிறீர்கள்? என்னிடம் ஒன்பது மணிகளும் உள்ளன. ''என ஒரு கம்பளத்தில்வைத்து வலாசுரன் என்பவனது உடலிலிருந்து தோன்றியவை'' என நவரத்தினங்கள் தோன்றிய வகை பற்றி கூறலானார்.

வலாசுரன் என்பவன் சிவபெருமானை நோக்கித் தவமிருந்து, ''எனக்கு அழிவே ஏற்படக் கூடாது. அப்படி ஏற்பட்டால் என் உறுப்புக்கள் யாவும் முற்றும் துறந்த முனிவரும் ஆசைகொள்ளும்நவரத்தினங்களாகமாறவேண்டும்'' என வரம் பெற்றான். வரம்பெற்ற வெறியிலே தேவேந்திரனுடன் போர் புரிய, தேவேந்திரன் தோற்றான். ''வல! நான் கைலாய மலையில் ஓர் யாகம் செய்யப் போகிறேன் தேவர்களுக்கு அவிர்ப்பாகமளிக்க நீ யாகப் பசுவாக வரவேண்டும்'' என இந்திரன் வரங்கேட்டான். அது கேட்ட வலன், ததீசி முனிவர் தம் முதுகெலும்பை தியாகம் செய்து புகழுடம்பு பெற்றார். நான் என் கொடைத் தன்மையால் ஒருடம்பும், நவமணிகளாக மாறுவதால்ஒருடம்பும் பெற்று இரண்டுடம்புடன் வாழ்வேன்'' என்றான்.

''ஈவதே பெருமை! அன்றி இரக்கின்றது இழிவு'' என்ற சொல் உள்ளவன் வலன். தான் தேவேந்திரனுக்குக் கூறியபடி ஒரு யாகப் பசுவாக மாறி நிற்க, தேவேந்திரன் அவனை பலியிட்டான். யாகம் முடிந்தது. அந்த பசுவினுடைய உடம்பிலிருந்து நவமணிகள் தோன்றின. தோன்றிய இடமும் அந்தந்த மணிகளுக்கான தேவதைகளும் வருமாறு:

புதன்	வெள்ளி	சந்திரன்
பச்சை	வைரம்	முத்து
பித்தம்	எலும்பு	பற்கள்
வியாழன்	சூரியன்	செவ்வாய்
புஷ்பராகம்	மாணிக்கம்	பவழம்
கோழை	இரத்தம்	தசை
கேது	சனி	ராகு
வைடூரியம்	நீலம்	கோமேதகம்
மயிர்	கண்கள்	வெள்நிணம்



கற்புக்கரசிகளின் கழுத்திலிருந்து முத்து உண்டாகும் என்பர். வைரம் தன்னைத்தானே துளைக்கும் பேறுள்ளது. பவழத்திற்கு அதிதேவதை செவ்வாய் ஆனபடியால் பவழம் தரிக்கும் பெண்டிருக்கு செவ்வாய் தோஷம் நீங்கும் என்பர்.

இதுபோல நவரத்தின சாத்திரம் பூராவும் சிவபெருமானது வாக்கிலிருந்து வெளியானது. ''இந்த ஒன்பது விதமான இரத்தினங்களையும் கொண்டு அழகிய மகுடம் செய்து சூட்டி இவ்வரசிளங்குமரனை, ''அபிஷேகப் பாண்டியன்'' என அழைப்பீர்களாக'' எனக் கூறி இவ்விளங்குமரனை நோக்கி புன்னகை பூத்து திடீரென்று மறைந்து ரிஷபவாகனத்தில் அம்மையுடன் காட்சி தந்து கோயிலுட் புகுந்தார். வணிகராக வந்தவர் சிவபெருமானே என்பதையறிந்து அனைவரும் மகிழ்ச்சி கொண்டனர். ''இறைவனே! தேவரீருக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். மாரிக்கு உலகம் கைம்மாறு செய்ய முடியுமா?'' எனப் பாண்டியன் வேண்டிப் பணிந்தான். இறைவன் கையால் திருமுடி பெற்ற வழுதி வாழ்க! வாழ்க! எனச் சான்றோர் வாழ்த்தினர்.

அரண்மனையிலிருந்த மற்றோர் யாவரும் ''வணிகராக வந்தவர் சோமசுந்தரப்பெருமான் எனில நாள்களையும் கோள்களையும் நலமணி ஆக்கினாரா? அல்லது தாளிலும் தோளிலும் கொண்ட பாம்புகளின் ரத்தினங்களை மணிகளாக்கினாரா?'' எனவிம்மிதமுற்று வினவினர்.

''வேளென வந்த நாயகர் சுந்தர விடங்கரானால்
நாள்களும் கோள்களும் பற்றி நவமணி
யாக்கினாரோ?
தாள்களும் தோள்களும் மார்பும் தரிக்க
நீணாகம் ஈன்ற
வாள்விடு மணியோ ஈந்தார்? யாதென
மதிக்கற் பாலேம்''.

அபிஷேகப் பாண்டியன் முடிசூட்டி மன்னவனாகத் திகழ்ந்த காலத்து, பொருட்களை முன்னர் எடுத்துச் சென்றவர் அகப்பட்டுக் கொள்ள, பழைய பொருள்களையும் பாண்டியன் பெற்று நன்கு வாழ்ந்தான்.

அபிடேகப் பாண்டியன் அரசு புரிந்துவருங்கால் சித்திரை மாதத்து சித்திரை நட்சத்திரத்தில் மதுரை நாயகனான சொக்கலிங்கப் பெருமானுக்குப் பச்சைக் கற்பூரம் கலந்த நீரில் விசேட அபிடேகம் செய்து அலங்கரித்து, அப்பெருமானின் அழகில் ஈடுபட்டு ''கற்பூர சுந்தரனா நீ'' என அழைத்து துதி செய்தான். ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பூஜை புரிய வரும் தேவேந்திரன் அவ்வருடம் பூஜை செய்ததன் காரணமாக சிறிது தாமதித்து பூஜை செய்து தன் உலகம் சென்றான். (தொடரும்)

ஸ்ரீ கூர்மாவதாரம்

• ஜெயஸ்ரீ மூகாம்பிகை

''அந்தரத்துறையமரரு மசுரருங் கடையும்
மந்தரத்தினை மறுகுமவ்வாரிதி மருவிச்
சுந்தரப்பெருங்கமடமாய் முதுகினிற்சுமந்தான்
கந்தரத்தினிற் கவுத்துவங்கவினிய கண்ணன்''

—பாகவதம்.

வேதங்காக்க ஒரு அவதாரம். அது மச்சாவதாரம். அமரரைக் காக்க அடுத்தொரு அவதாரம். அது கூர்மாவதாரம். தத்துவத்தைத் தன்னுள் அடக்கித் தரணி வாழ்வோர்க்குத் தருமம் உரைக்கும்-தர்மத்தின் மர்மம் விளக்கும் தனிப் பெரும் திருவவதாரம். இவ்வவதாரம் நிகழ்வதற்குக் காரணமாக அமைந்தவர் துர்வாசர் என்னும் முனிவரர். இவர் சிவாம்சமாகத் தோன்றியவர். சிறுமை கொண்டவர்களை சினந்தடக்கும் சிறப்புச் மிக்க செம்மல்.

இவர் ஒரு சமயம் வான்வழியே தேவலோகம் வந்து கொண்டிருந்தார். தேவேந்திரர் ஐராவத யானை மீதமர்ந்து பவனி வந்து கொண்டிருந்தார். அப்போதுதான் துர்வாசர் திருமகள் பிரசாதமாக ஒரு மலர் மாலையைப் பெற்று தம் சடையில் அணிந்து வந்திருந்தார். திருமகள் அருள் முற்றும் துறந்த தம்மைவிட மூவுலகை ஆளும் இந்திரனுக்கே மிகத்தேவை என்று எண்ணியவராக தாம் அணிந்திருந்த மாலையைக் கழற்றி இந்திரனுக்களித்தார்.

புறக்கண், அகக்கண் என்று இரண்டுண்டு. அகக்கண் என்பது அறிவுக் கண். அகந்தை என்பது இந்த அறிவுக்கண்ணை மறைக்கும் திரை. புறக்கண் பார்வையற்றவன் பாதை தெரியாமல் பாழுங்கிணற்றில் வீழ்வதுபோல், அகந்தையில் அகக்கண் பார்வையை இழந்தவன் தன் அழிவைத் தேடிக் கொள்கிறான். ஆயிரங்கண்ணனாகிய தேவேந்திரன் தன் அறிவுக் கண்ணை இழந்த காரணத்தால், மகரிஷியின் மாண்பை மறந்தான். அவர் அளித்த மாலையின் மகிமையை மறந்தான்.

வணங்கிப் பணிவோடு பெற்று மனம் நிறைந்த பக்தியுடன் கண்களில் ஒற்றிக்கொள்ள வேண்டியவன், மிக அலட்சியமாக யானையை அடக்கும் அங்குசத்தின் நுனியால் அதை வாங்கி யானையின் மத்தகத்தில் போட்டான். யானையோ, தன் துதிக்கையால் மாலையை எடுத்து காலடியில் போட்டு மிதித்தது.

மூன்றாவது கண் இல்லாமலே தீப்பறக்கப் பார்த்தார் துர்வாசர். ''மூவுலக வேந்தன் என்று அடாத செயல் புரிந்தாய், தேவேந்திரா! அகந்தை தந்த அந்த வாழ்வும் திருமகள் அருளும் உன்னை விட்டு நீங்கக் கடவது!'' என்று சபித்தார்.

தவறுணர்ந்த தேவேந்திரன் பணிந்தும், மகரிஷி மனம் கனியவில்லை. தவறு செய்தவன் தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும் என்ற கொள்கையுடன் சென்றுவிட்டார்.

மன்னவன் செய்யும் தவறு மக்களையும் பாதிக்கும். மூவுலகங்களிலும் திருமகள் அருள் மறைந்தது. வனம் என்பது வற்றிப் போனது. பஞ்சம் ஏற்பட்டது. முனிவர்கள் மனம் யாகம் முதலான நற்கருமங்களை நாடவில்லை. வேள்விகள் நடைபெறாததால் தேவர்கள் அனைவரும் பலம் குன்றினர். அசுரர்கள் தேவர்கள் மீது போர் தொடுத்தனர். தேவர்கள் தோற்றனர். அவர்கள் அனைவரும் மேரு மலையின் சிகரத்தில் அமைந்த பிரம்ம தேவரின் திருச்சபையை அடைந்து அவரைப் பணிந்து தங்கள் நிலையைத் தெரிவித்தனர்.

''அளப்பறிய ஆற்றல் நிறைந்தவர், பிறரால் அறிய வொண்ணாதவர், தனக்கென ஓர் குணம் இல்லாதவர், அனைத்து குணங்களுக்கும் ஈசுவரர் ஸ்ரீமந் நாராயணர். அவரைச் சரணடையுங்கள்'' என்று தேவர்களுக்கு வழி காட்டினார் நான்முகர். தேவர்களும் திருமாலைத் துதிக்க, அவர்களிடையே பகவான் அழகின் பூரணத்துவமாக சங்கு சக்கர கதா பாணியாக, வனமாலை திருமார்பில் புரள, புன்முறுவல் பூத்த திருவதனத்துடன், ஆயிரம் ஆதித்தர் ஒருங்கே தோன்றினாற்போன்ற பேரொளியோடு தோன்றினார்; உம்பர்வாழ்வு மலர வழியுரைத்தார்.

''தேவர்களே! முதற்கண் நீங்கள் செய்ய வேண்டிய செயல், பாற்கடலைக் கடைவது. கடைந்தால் அமிழ்தம் கிடைக்கும். அதைப் பருகினால் மரணமும் மூப்பும் இல்லா நிலை பெறுவீர்கள். அசுரரோடு சமாதானம் செய்து கொண்டு இருசாராருமாகக் கடையுங்கள். அனைத்துவகை செடி கொடிகளையும் மூலிகைகளையும் பாற்கடலிலிட்டு, மந்தரமலையை மத்தாகக் கொண்டு, பாம்பரசன் வாசுகியை அதில் கயிறாகப் பிணைத்துக் கடையுங்கள்,

தானும் உதவி செய்கிறேன். அதனால் வரும் நற்பயன் முழுவதும் உங்களுக்கே கிட்டும். சத்துவகுணமற்ற அசுரர்கள் அப்பயன் பெற மாட்டார்கள். தேவர்களே! அசுரர்கள் எதை விரும்பினாலும், நீங்கள் அதற்கு இணங்குங்கள். எந்த ஒரு செயலையும் சமாதானத்தினால் நிறைவேற்றிக் கொள்வது போன்று சண்டையினால் நிறைவேற்றிக் கொள்ளவியலாது. மேலும் நான் கூறுவதைக் கவனமாகக் கடைப்பிடிப்பீர்களாக. முதலில் சமுத்திரத்தினின்றும் ஆலால விஷம் கிளம்பும். அதைக் குறித்துக் கவலைப்பட வேண்டாம். அதன் பிறகு அதனின்றும் தோன்றும் மற்ற பொருள்களிடம் விருப்பம் வைக்க வேண்டாம். நீங்கள் நலம் பெறுவீர்கள்!''

—என்றுரைத்து மறைந்தருளினார் பெருமான்.

அவ்வண்ணமே அமரர்கள் அசுரர்களோடு நட்பு கொண்டனர். பாற்கடலைக் கடைய இருதரப்பினரும் ஒப்பந்தம் செய்து கொண்டு முதலில் மந்தர மலையைத் தூக்கி வந்தனர். 'எவ்வளவு பெரிய மலையைச் சுமந்து வருகிறோம். நம் வலிமைதான் என்னே!'' என்று அவர்கள் மனதில் கர்வம் ஏற்பட்டது. அக்கணமே மலை நழுவியது. எவ்வளவு முயன்றும் அதைத் தூக்க முடியவில்லை. தேவேந்திரன் ஆணவத்தால் அவன் அரசுபீடம் நழுவியது. இங்கே அமரர் அசுரர் அத்தனைபேர் ஆணவத்தால் மலை நழுவியது. தங்கள் முயற்சியினால் மீண்டும் மலையைத் தூக்க முடியாத அவர்கள் அகந்தை நழுவ, தலை கவிழ்ந்தனர். தங்கள் முயற்சி வீணாகுமோ என்று கலங்கினர். அனைத்தும் ஆண்டவன் அருள் என்ற அறிவு பெற்றனர். அத்தருணம். அங்குத் திருமால் தம் கருட வாகனத்தில் அமர்ந்தவராகத் தோன்றினார். தம் திருக்கரத்தால் மலையைத் தூக்கிக் கருடன் மீது வைத்தார். தனியொரு கருடன் அதைச் சுமந்து கொண்டு, மிக வேகமாகப் பறந்து சென்று பாற்கடலிற் சேர்த்தார். பின் அமரர்கள் புல் பூண்டு முதல் அனைத்துத் தாவரங்களையும் பாற்கடலில் இட்டனர். மந்தரமலை மத்தானது. வாசுகி கயிறானது.

சத்துவகுணம் நிறைந்த தேவர்களிடம் அன்பு கொண்ட திருமால், அவர்களோடு சேர்ந்து நின்று பாம்பின் தலைப்பக்கத்தைக் கடைவதற்காகப் பிடித்தார். மலையின் மறுபுறம்நின்று பாம்பின் வாலை அசுரர்கள் பிடிக்க வேண்டும். ஆனால் அவர்கள் மனம் முரண்பட்டுத் தனியாகப் போய் அமர்ந்துவிட்டனர். பாம்பின் வலைப் பிடிப்பது தங்களுக்குக் கௌரவக் குறைவு என்று எண்ணினார்கள்.

மகாவிஷ்ணு அவர்களை நோக்கி, 'அசுரர்களே, நாம் சமாதானமாகப் போகலாம். நீங்களே தலைப்பக்கத்தைப் பிடியுங்கள், நாங்கள் வால்பக்கத்தைப் பிடிக்கிறோம்''—என்று கூறி வால்புறத்தைப் பற்றினார். தேவர்களும் அவரைப் பின்பற்றினர். அசுரர்கள் ஆரவாரத்தோடு தலைப்புறம் பிடித்தனர். கடையும் வேலை தொடங்கியது. சிறிது நேரத்தில் பாரம் தாங்காமல் மலை மூழ்கியது. தங்க

ளுடைய அத்தனை பராக்கிரமத்தையும் மீறி, விதி தன் வலிமையைக் காட்டிவிட்டது கண்டு அனைவரும் மனம் வெறுத்துப் போயினர்.

இத்தருணத்தில் இறைவன் தன் இரண்டாவது திருவவதாரத்தை நிகழ்த்தினார். ஆச்சரியகரமான மிகப்பெரிய ஆமை வடிவம் கொண்டு நீரில் மூழ்கி, மலையை மேலே தூக்கினார். ஆமையின் முதுகு வஜ்ராயுதத்தைவிட கடினமானதாக, வலிவுள்ளதாக இருந்தது. லட்சம் யோசனை பரப்புள்ள பெரிய தீவு போன்று விளங்கினார். தேவாசுரர்கள் மீண்டும் மகிழ்ச்சியோடு கடையத் தொடங்கினர்.

''அடைந்திட்டமரர்கள் ஆழ்கடல்தன்னை
விடைந்திட்டு மந்தரம் மத்தாக நாட்டி
வடம்சுற்றி வாசுகி வன் கயிறாகக்
கடைந் திட்ட கைகளால் சப்பாணி
கார்முகில் வண்ணனே சப்பாணி''

என்று பரமனுக்கு பல்லாண்டுப் பாடிய பெரியாழ்வார் பாற்கடல் கடைந்த இந்நிகழ்ச்சியைக் கூறிச் சப்பாணி கொட்டுகிறார்.

விசைபடக் கடையுங் காலத்தில் பெரிய அம்மந்தரமலை, தன் முதுகின் பரப்பெல்லாங் கொண்டு சுழலும் போது, அதனைத் தினவு சொரிகின்றவாறு கொண்டு சுகமாக இருந்தார் திருமால்.

தேவாசுரர்கள் கடைந்து கடைந்து சோர்ந்து போயினர். கயிறாகிய வாசுகியும் சோர்ந்தான். பகவான் மகாவிஷ்ணு, அசுர வடிவில் அசுரர்களிடமிருந்து கொண்டு அவர்கள் பலத்தை வளரச் செய்து கொண்டும், அவ்வாறே தேவ வடிவில் தேவர்புறம் நின்று, அவர்கள்பலத்தை வளரச் செய்து கொண்டும், உருவமற்ற நிலையில் ஒருவரும் அறியாமல் வாசுகியினுள் புகுந்து கொண்டும் கடைந்தார்.

மலை மேலே கிளம்பியது. மலை கடலில் மூழ்கியபோது துயருற்ற தேவாசுரர்கள், மலை மேலேழும்பிய போதும் துவண்டனர். பெருமான் தம் கரத்தால் மலையின் உச்சியை அழுத்தி மலையை நிலைப்படுத்தினார். ஆயிரம் திருக்கரங்களுடன் விளங்கிய பகவான் மீது முனிவர் முதலானோர் வானில் நின்று பூமாரி பொழிந்தனர்.

முதலைக் கூட்டங்கள் சிதறடிக்கப்பட மீண்டும் மிகவேகமாகக் கடல் கடையப்பட்டது. வாசுகியின் உடல் நசுங்கிச் சோர்ந்தது. அப்பாம்பின் ஆயிரம் கண்களினின்றும், வாய்களினின்றும், மூச்சுக் காற்றினின்றும் தீயும், புகையும் கிளம்பிப் பரவியது. அதனால் வாசுகியின தலைப்பக்கம் இருந்த அசுரர்கள் அதனால் மிகவும் பாதிக்கப்பட்டனர். பௌலோமன், காலேயன், பலி, இல்வலன் முதலிய அசுரர் அனைவரும் காட்டுத் தீயால் பொசுக்கப்பட்ட சரள மரங்கள் போலத் துவண்டு வீழ்ந்தனர். தேவர்கள் வால்பக்கம் இருந்ததால் விஷக் காற்று அவர்களைப் பாதிக்கவில்லை. அது மாத்திரமல்ல, அந்த விஷக் காற்றினால் அடிக்கப்பட்ட மேகங்கள் அவர்கள்பக்கம் திரண்டு மழை தூறல்களைச் சொரிந்தன. அதனால் தேவர்களுக்கிருந்த களைப்பும் நீங்கியது.

எவ்வளவு கடைந்தும் அமிர்தம் உண்டாகவில்லை. அப்போது பெருமான் தானே கடையலானார். அப்பொழுது, சமுத்திரத்தினின்றும் கொடிய ஆலாலவிஷம் கிளம்பி எங்கும் பரவியது. அனைவரும் ஓடத் தலைப்பட்டனர். பிரஜாபதிகளும், மற்ற தேவர்களும் உமாதேவி சமேதராக கயிலையிங்கிரியில் வீற்றிருக்கும் பரமசிவனாரைத் துதித்து வேண்டினர். பரமசிவனாரும் மனங்கனிந்து அவ்விஷத்தை உள்ளங்கையில் ஏந்தி உட்கொண்டார். பதைத்த பார்வதிதேவி விஷம் உள்ளிறங்காமல் கழுத்தைப்பற்றவும், விஷம் கழுத்திலேயே நின்றது. கழுத்து கறுத்தது. திருநீலகண்டர் என்ற திருநாமம் ஏற்றார். அவரது கரத்திலிருந்தும் கசிந்த விஷத்தை தேள், பாம்பு, மற்றுமுள்ள விஷப்பிராணிகளும், விஷக் கொடிகளும் உண்டன. பிரம்மா, விஷ்ணு முதல் அனைவரும் பரமசிவனாரைப் புகழ்ந்தார்கள்.

மீண்டும் கடலைக் கடைந்தனர். கடலிலிருந்து காமதேனு உண்டாயிற்று. பின் சந்திரன் போன்ற வெண்மை நிறம் கொண்ட உச்சைசிரவஸ் என்ற குதிரை தோன்றியது. ஐராவதம் என்னும் வெண்ணிறயானை, பின் கௌஸ்துபம் என்ற தாமரைபோல் சிவந்த இரத்தினம், பாரிஜாதம் முதலியவை உண்டாயின. அதன்பின் அழகிய ஆடை ஆபரணங்கள் பூண்ட அப்சரப் பெண்கள் தோன்றினர்.

அனைத்துலகும் சிறந்து விளங்க, அருள் சுரந்து நலம் பயக்கும் அன்னை, பரமனின் சக்தியாம் திருமகள் பாற்கடலில் உதயமானாள்.

அனைவரும் மெய்ம்மறந்தனர். தேவேந்திரன் ரமாதேவிக்கு ரத்தினசிம்மாசனமளித்து அமரச் செய்தான். கங்கை முதலான புண்ணிய நதிகள் அங்கே திரண்டு வந்தனர். முனிவர் அத்தீர்த்தங்களால் அபிஷேகம் செய்தனர். கந்தர்வர் கானமிசைக்க, மேகங்கள் பல்வகை வாத்தியங்களை முழக்க, திக்கஜங்கள் என்னும் யானைகள் தேவிக்குப் பூரணக் கலசங்களைக் கொண்டு அபிஷேகம் செய்தன. வேதம் ஒலித்தது.

அபிஷேகம் முடிந்ததும் சமுத்திர மன்னர் தங்கப் பட்டாடைகளை வழங்கினார். வருணர் வைஜயந்தி என்னும் மாலையை அளித்தார். விஸ்வகர்மா பல்வகை அணிகளைப் பரிசளித்தார். நாமகள் சரஸ்வதி முத்தாரம் கொடுக்க நான்முகர் தாமரை மலரளித்தார். நாகர்கள் குண்டலங்களைக் கொடுத்தனர்.

பட்டாடை பூண்டு, அனைத்து ஆபரணங்களும் அணிந்து சலங்கையொலி சுபநாதம் ஒலிக்க, மணமாலை கரத்தேந்தி நாணத்துடன் நடந்து வந்த லட்சுமிதேவி திருமாலின் திருமார்பில் அதைச் சூட்டினாள். திருமால் தம் மலர்மார்பையே திருமகளுக்கு இருப்பிடமாய்

வழங்கினார். மங்கள வாத்தியங்கள் முழங்கின. மலர் மழை பொழிந்தனர் மற்றவர் அனைவரும்.

அதன் பிறகு கடலில் வருணி தேவி (அறிவை மடுக்கும் மது) தோன்றினாள். இறுதியில் தன்வந்திரி என்னும் அழகிய மகாபுருடன் அமுதக்குடத்தை ஏந்தியவராக வெளிப்பட்டார். இவர் திருமாலின் அம்சம். ஆயுர் வேதத்தை நமக்களித்தவர்.

அமிழ்தம் கண்டதும், அசுரர் பாய்ந்து அதைப் பிடுங்கிக் கொண்டனர். அமரர்கள் கலங்கினர். மகாவிஷ்ணுவைச் சரணடைந்தனர். திருமாலும் ஒரு பெண்ணாக, அதியற்புத அழகான மோகினியாக வடிவெடுத்து, தன் அழகினாலேயே அசுரர்களை மயங்கச் செய்து அமுதம் பரிமாறுகிறேன் என்று கூறி அமரர்களுக்கே அமிர்தம் முழுதும் கிடைக்கச் செய்தார். அமுதம் உண்ட அமரர் வலிவு பெற்றனர். அசுரரை வென்று தேவவுலகைப் பெற்றனர். பெருமான் அருளால் மீண்டும் பெருமை பெற்று வாழ்ந்தனர்.

எவ்வளவு உயர்ந்த நிலையை எட்டியிருந்தாலும், அடக்கம் வேண்டும். பெரியோரிடத்தில் பணியும் பண்பு வேண்டும், அது இல்லாவிடில் திருமகள் நீங்கும் அபாயம் உண்டு என்னும் தத்துவம் தேவேந்திரன் துர்வாசரிடம் சாபம் பெற்றநிலை விளக்குகிறது.

சத்துவ குணம் நிறைந்தவர்கள் காலவசத்தால் அறிவிழந்து அடாத செயல் புரிந்து துன்புற்றாலும், அவர்கள் அறிவு பெற்று அடி பணிந்தால் ஆண்டவன் காப்பார் என்பதை பகவான் கூர்மாவதாரம் செய்து விளக்கியுள்ளார்.

அதன் பிறகும்கூட அமரர்கள் தங்கள் திறத்தால் செயல் நிகழ்த்துகிறோம் என்று எண்ணுந்தோறும் அவர்கள் அகந்தையை அடக்கி அறிவு புகட்டுகிறார்.

ரஜோ குணமும், தமோ குணமும் அசுராம்சம். சத்வ குணம் தேவாம்சம். ஆண்டவன் அருள் சத்வகுணம் நிறைந்த அடியார்களுக்கே என்பதை தம் அவதாரத்தின் மூலம் விளக்கிய பெருமான், மாந்தர் ஆமையைப் போன்று புறஅபாயம் தன்னைப் பற்றாமலிருக்க ஐம்புலன் அடக்கம் கொள்ள வேண்டும் என்பதையும் விளக்கியுள்ளார்.

பகவான் செய்த கூர்மாவதாரம், வாழ்வில் நாம் நடக்க வேண்டிய வழியையும், ஆண்டவன் நமக்கருளும் நிலையையும் விளக்குகிறது.

''மலைமுகடு மேல்வைத்து வாசுகியைச் சுற்றி
தலைமுகடு தானொருகை பற்றி-அலைமுகட்டு
அண்டம்போய் நீர்தெறிப்ப அன்றுகடல்
கடைந்தான்
பிண்டமாய் நின்றபிரான்.''

—பேயாழ்வார்.

மீனாய் வந்தாண்ட மன்னன்



வானோர் அளவும் முதுமுந்நீர் வளர்ந்த காலம் வலியுருவின்
மீனாய் வந்து வியந்துய்யக் கொண்ட தண்டாமரைக் கண்ணன்

—திருமங்கையாழ்வார்.

அட்ட வீரட்டத் திருத்தலங்கள்

—டாக்டர் சிவப்பிரியா—

சீரெட்டுத் திசையிலும் சிறப்புற சிவனின்
பேரொலிக்கும் திருத்தலம் பலப்பல அவற்றில்
விரட்டத் தலங்கள் எனப் பேர் விளங்க
ஓரெட்டுச் சிவத்தலம் ஓங்கும் புகழில்.

மறப்பினை நீக்கி நினைந்திடும் அன்பர்
பிறப்பினை நீக்கும் பிறப்பிலி பொலியும்
குறுக்கை கடவூர் கண்டியூர் கோவலூர்
பறியலூர் வழுவூர் விற்குடி அதிகை.

வந்துவில் வளைத்து மலர்க்கணை விடுத்த
இந்திரன் ஏவிய திருமால் மைந்தன்
கந்தன் பிறந்த கண்ணின் பொறியால்
வெந்துச் சாம்பலாய் விழுந்தது குறுக்கை.

ஆக்கமும் அழிவும் இல்லா இறைவனை
வாக்குமன உடலால் வழிபடும் பாலனைப்
போக்கிடும் காலனை நீக்கிடத் தில்லையில்
தூக்கிய திருவடி தழைத்தது கடவூர்.

அரிஅயன் ருத்திரன் மூவரும் வழிபடும்
பெரியனை மறந்து பரமன் யான் எனும்
சிரமைந்து நான்காய் நிலைக்க ஒருதலை
விரல்நகம் கிள்ளிக் களையும் கண்டியூர்.

ஐந்தொழில் இறைவிழி அம்மை மறைக்க
வையகம் இருளும் ஒளிதரும் நுதற்கண்
மையிருள் வந்த அசுரன் வதங்க
வைத்துச் சூலத்தில் கோத்தது கோவலூர்.

சிவம்அது நீங்கின் அனைத்தும் சவமாம்
உண்மையை உணராத் தக்கன் வேள்வி
அவியத் தேவர் திசை திசை ஓடித்
தவித்திட ஆட்டின் தலைதரும் பறியலூர்.

ஆணாம் பெண்ணாம் ஈசன் அடிமுடி
காணார் மால்அயன் கடுவல் அசுர
யானை உரித்துக் கருந்தோல் செந்நிற
மேனியில் முன்னவன் போர்க்கும் வழுவூர்.

அருவமும் உருவமும் ஆகும் பரமன்
பெருவிரல் சிறிய சிறுநில வட்டம்
இருகரம் சேர்த்து எடுத்த சலந்திரன்
சிரத்தினை ஆழியாய்ச் சிதைக்கும் விற்குடி.

உறவும் பகையும் இல்லா ஒருவன்
பறக்கும் கோட்டை மூன்றும் அழியக்
குறுநகை செய்து அசுரரைக் காத்து
பெரும்பணி புரியப் பணித்திடும் அதிகை.

மண்ணில் கடவுளைக் கண்டசீர் அடியார்
பண்ணில் போற்றிப் பாடிடு பெருமை
விண்ணவர் வியந்து வழிபடும் பழமை
எண்பெரும் தலங்கள் இவற்றின் அருமை.

திருமழிசை அருள்மிகு ஒத்தாண்டேசுவரர் ஆலயம்

டாக்டர் தேவராஜன், எம்.பி.பி.எஸ்., திருமழிசை.

மக்கள் தம் அன்பைக் கொட்டுவதற்கும் துன்பத்தைப் போக்கிக் கொள்வதற்கும் இன்னலைக் குறைத்துக் கொள்வதற்கும், தங்கள் துன்பச்சுமையை இறக்குவதற்கும் உரிய இடம் தான் திருக்கோயில்கள்.

மக்களின் ஒற்றுமையின், ஒருமைப்பாட்டின் சின்னமாகத் திகழ்வதுதான் திருக்கோயில்கள்.

அத்தகைய திருக்கோயில்களில் ஒன்றுதான் திருமழிசை ஒத்தாண்டேசுவரர் திருக்கோயிலாகும்.

அக்கோவிலில் குடிகொண்டிருக்கும் இறைவன் திருப்பெயர் ஒத்தாண்டஈச்சுவரர்; இறைவி திருப்பெயர் குளிர்ந்த நாயகி அம்மன் என்பர்.

மனோனுகுலேசுவரர் என்றும் சீதளாம்பிகை என்றும் வடமொழியில் தெய்வங்களை இப்பெயர் இட்டு அழைப்பர்.

இத்திருக்கோவில் சோழர் காலக்கோவில் என்பதற்கு இதன்கண் உள்ள கல்வெட்டும் தலபுராணமும் சான்றாகும்.

சோழர்காலக் கோவில் என்பதற்கு இத்தலத்தில் இறைவன் காட்சி தந்து வெட்டுண்ட கையை மீண்டும் அவன் அருளால் பெற்றவன் சோழன் கரிபெருவளவன் என்பர். கரிகால் பெருவளத்தான் என்றும் கரிகாற் சோழன் என்றும் அழைப்பது, காவிரிக்கு கல்லணை கட்டியவன் பெயரெயாகும். அவன் பெயரைத் தலப்பெருமை நினைவு படுத்துவதால் இது சோழர் காலக் கோயில் என்பர்.

யானை படுத்திருப்பது போன்று—யானை முதுகு போன்று மூலத்தான அடிபீடம் அமைய மேல்கோபுரம் அமைந்துள்ளதால் இதை கஜப்பிரஷ்டம் என்றும் களிற்று நிலை என்றும் கூறுவர். இத்தகையஅமைப்பு சோழர்கால அமைப்பாகும் என்பதால் இது சோழர் காலத்துக் கோயில் என்பர். இது போன்ற அமைப்புடையதே திருவேற்காடு வேதபுரிஸ்வரர், திருமுல்லைவாயில் மாசிலாமணி ஈசுவரர் திருக்கோயில்களாகும்.

கோயில் தல புராணம்

கரிபெருவளவன் சிவதரிசனத்தின் பொருட்டு யானையின் மீதமர்ந்து, திருமழிசை என்னும் புவிசாரம் நிறைந்த சிவதலத்தில் வருங்கால், இறைவன் அவ்வரசனை ஆட்கொள்ளவேண்டி யானை அடிசிக்கிய ஊணாங்கொடியின் கீழ் அரசனது உடைவாள் வெட்டுப்பட்டு தான் தோன்றியாய் வெளிப்பட்டவர். இத்தலம் அறுபத்து நான்கு சுயம்புலிங்க மூர்த்தங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

ஊணாங்கொடியை வெட்டிய உடைவாள் அருஉருவ வடிவாகிய லிங்கத்தின் மீதுபட இரத்தம் கசிய, அதைக்கண்ட சோழன் தன் கையை வெட்டிக் கொள்ள அன்பின் மிகுதியை கண்ட ஈசன் ஒத்து ஆட்கொள்ள கை தந்து காட்சிதந்தார். அதனால் இத்தலத்தில் ஈசன் பெயர் ஒத்து ஆண்டவர், ஒத்தாண்டேசுவரர் என்று அழைப்பர்.

கீழ்வரும் பாடல்கள் இத்தலத்தின் பெருமை உணர்த்துவதைக் காண்மின்:

''காண்பார்க்குக் காணலாம் தன்மையனே
கைதொழுது
காண்பார்க்குங் காணலாங் காதலாற்காண்பார்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே
தொல்லுலகுக்
காதியாய் நின்ற அரன்.''

''வேழமிவர்ந்து வரும் சோழர்க் கன்று
விடையினது
பாழியெருத்த மிவர்ந்தொரு கைதந்து பார்
மிசை
வாழ ஒத்தாண்டவர் குளிர்ந்தாளுமையுடன்
வான்மகிழ
சூழுமடியவர் போற்றிட நின்றாரைச் சொன்
மின்களே''

''உம்பர்புகழ் மாமழிசை ஒத்தாண்டஈச்சுரனை
தும்பிமுகனைத்தந்த தொல்லோனை இப்பதி
யில்
மாதங்க மூர்ந்த வளவன்கை தந்தானை
மாதங்கங் கொண்டோனை வாழ்த்து.''

மூலவர் சிறப்பு

இறைவன், அருவம், அரு உருவம், உருவம் என்னும் முப்பொருளாய் மூவடியாய் விளங்குபவன். உருவமே இல்லாது இருப்பது அருவம்; உருவமும் அன்றி அருவமும் அன்றி விளங்கும் லிங்க வடிவம் அரு உருவம். நம்மைப் போன்று ஐம்பொறிகளோடு உருவத்தோடு விளங்குவது உருவம்.



இத்தகைய மூன்று நிலைகளில் பின்னி ரண்டு நிலைகளோடு தோன்றி மூன்று நிலைக்கு உரிய திருக்கோவிலாக விளங்குவது இதன் சிறப்பாகும்.

தல விருட்சம்

ஆதியில் மரங்கள் சூழ்ந்த சோலையில் இயற்கைச் சூழலில் இறைவனை எழுந்தருளச் செய்து வணங்கி வந்தனர். பின் அங்குக் கோயில் எழுப்பப்பட்டது. முன்பு எந்த மரத் தின் கீழ் இறைவன் அமர்ந்திருந்தாரோ அதுவே அத்தலத்தின் தல விருட்சமாகப் பின்பு அமைந் தது என்பர். அந்த வகையில் இக்கோயிலின் தல விருட்சம் வில்வமரமாகும். வில்வமரம் மருந்தாகப் பயன்பட்டு உடல் நோயைப் போக் குவது போன்று இத்தலத்தின் இறைவனும் உள நோயைப் போக்குபவன் என்று போற்றப்படு கிறார்.

கோயிலின் பிற சிறப்புகள்

கோயிலின் எதிரில் அழகான திருக்குளம் அமைந்துள்ளது. இது ஊருக்கே ஓர் அழகைத் தந்து கொண்டிருக்கிறது. வருவோரைத் தன் பக்கம் இழுக்கும் அழகுத் தன்மை இதன்பால் உள்ளது.

'ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே' என்பதன் தத்துவமாக விளங்குபவர் ஆடல் அரசர் என்னும் நடராசர். அவர் உருவம் இக் கோவிலில் உற்சவ மூர்த்தியாக உள்ளது. அந்த நடராசர் கண்நோக்கு அவர் திருப்பாதத்தைப் பார்ப்பது போன்று உள்ளது. இதுபோன்ற அமைப்புடைய உற்சவ மூர்த்தியை வேறு இடத் தில் காண்பது அரிதாகும். இதில் அடங்கி உள்ள தத்துவம் பிறவிப் பெருங்கடல் நீந்த இறை வன் அடி சேர்க, இடைவிடாது நினைக்க என் பதை உணர்த்துவது என்க. அடுத்து இறைவன் அருளைப் பெற அவன் திருப்பாதத்தைக்கண்டு நினைந்து வணங்கு என்பதையும் இறைவி என் றால் அவள் திருமுகத்தைக் கண்டு நினைந்து வணங்கு என்பதையும் நினைவூட்டுவதாக இவ் வுருவம் அமைந்துள்ளது.

சிறப்பிற்குரிய அழகான ரிஷபநாயகர் இக் கோயிலில் உள்ளது மற்றொரு சிறப்பாகும்.

இது தேவையான அளவுடைய திருக்கோ யிலாகத் திகழ்கின்றது. மிகப்பெரிய கோயிலும் அன்று; சிறிய கோயிலும் அன்று; நடுத்தரமான கோயில் என்றே சொல்லலாம். தற்பொழுது இத்திருக்கோயிலுக்கு இராச கோபுரம் கட்டுவதற்கு முயன்று அடித்தளம் வரை போடப்பட்டுள்ளது. இது விரைவில் இராச கோபுரத்தோடு தோன்றித் திகழும்.

இக்கோவிலில் பங்குனி உத்திரப் பெரு விழாவும், கந்தசஷ்டி லட்சார்ச்சனை விழாவும் சூரசம்காரவிழாவும், ஆடிப்பூர லட்சார்ச்சனை விழாவும், ஐப்பசியில் அன்னாபிஷேகமும் சிறப் பாக நடைபெற்று வருகின்றன. மேலும் மாதத் திற்கு இருமுறை பிரதோஷ விழாவும், சிறப்புச் சமயச் சொற்பொழிவுடன் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இறையடி சேரும் வழி

கோவைக்கிழார்

1. வாசனை

முதல்வனுடைய அருளால் மறத்தலைச் செய்யாத அன்பு நிலையாகிய நிட்டை கூடிய எனக்கு இனி என்ன வாய்க்கும் என்பது இறுதிக் கேள்வி. எனக்கு நிட்டை கூடி இருந்தும் என்னுடைய உடல் எனக்கு இன்னும் இருக்கிறது. இந்த நிலையே சீவன் முத்தி நிலை என்று முன்னே சொன்னேன்.

உடல் எனக்கு இன்னும் இருக்கிற நிலை என்னுடைய நிகழ்வினையை (பிராப்தம்) இன்னும் அனுபவித்துக் கழிக்காததால் உண்டானது. நான் இனிமேல் புதுவினையாகிய விதை போடாமலும் இருக்க வேண்டும். அவ்வாறு இன்னும் எனக்கு இருக்கும் தற்போதைய வினை முடியும் வரையும் உடல் இருக்கும். அது நீங்கினவுடனே மேலும் உடல் இனி எனக்கு வராது. மறுபிறப்பும் வராது. அந்த மேல்நிலை வரும் மட்டும் நான்மிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

பழக்கம் வெகு கொடியது என்று முன்பே ஒரு உதாரணத்தால் காட்டினேன். இப்பழக்கம் பல அளவற்ற பிறப்புக்களின் வாயிலாக ஏற்பட்டது. பெருங்காயம் வைத்திருந்த பானையில் அதை எடுத்துவிட்டுப் பானையைக் கழுவின பின்பும் சிறிது காலம் அதன் வாசனை வீசும் என்று சொன்னேன். அதுபோல முந்திய பல பிறப்புகளில் கெட்டவர்களுடன் பழகிய பழக்கம் போவது அரிது. கள்ளைக் குடித்துப் பழகிய ஒருவன் நல்ல சற்போதனையினால் அதை விட்டு விட்டபோதிலும் ஏதோ ஒரு நாள் கட்கடைக்கு அருகில் சென்றபோது அவ்வாசனை அவனை இழுக்கும். அங்கே பழைய கள்குடி நண்பர்கள் இருந்தால் அவர்களுடைய போதனை மிகப் பெரியதாகி சற்போதனையை மறைத்து உதறிவிடும். உடனே தன்வயத்தன் ஆகாதபடி அவன் கட்கடைக்குள் சென்று குடிக்கத் தொடங்குவான். அத்தனை நாள் கொண்ட வைராக்கியமும் ஒரு கணத்தில் தொலைந்து போகும். ஆகவே எச்சரிக்கை பலமாக இருக்க வேண்டும்.

ஒரு நாள் சில செம்படவப் பெண்கள் மீன் கூடைகளை எடுத்துக் கொண்டு அடுத்த சந்தையில் மீன்விற்று வெறுங்கூடைகளைச் சுமந்து கொண்டு தம் வீடுகளுக்குத் திரும்பினார்கள். வரும் வழியில் பெரும் மழை வந்துவிட்டது. நேரமும் மாலை நேரம். அருகில் தெரிந்த ஒரு தோட்டத்துச் சாலைக்குள் புகுந்து மழைக்கு ஒதுங்கினார்கள். வெகு நேரம் ஆகியும் மழை நிற்காததனால் அச்சாலையிலேயே படுத்துக் கொண்டார்கள். அச்சாலையில் தோட்டக்காரன் வாசனை மிகுந்த மலர்களை எடுத்துக் கூடைகளில் நிரப்பி வைத்திருந்தான். அவ்வாசனையை மோந்த செம்படவப் பெண்களுக்குத் தூக்கம் வரவில்லை. ''இதென்ன பொறுக்க முடியாத வாசனை! இதனால் தூக்கமே பிடிக்கவில்லை'' என்று ஒவ்வொருவரும் முணு முணுத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஓர் அனுபவம் முதிர்ந்த கிழவி ஆமாம், ''இந்த வாசனை பொல்லாதது. நம் மீன் கூடைகளை மூக்கின் அருகில் வைத்துக் கொள்வோம். அது இந்த வாசனையை அடித்துவிடும்' என்று சொன்னாள். அடுத்த கணமே ஒவ்வொருத்தியும் தன்தன் மீன் கூடையை முகத்தருகே வைத்துக்கொண்டு அதன் பயனாகக் குறட்டை விட்டுக் கொண்டு தூங்கினார்கள். அப்பெண்களுக்கு நறுமணம் பொல்லாததாகி விட்டது. ஏனெனில் முன்னேமீன் வாசனை பிடித்துக் கொண்டு இருந்தபடியால், கிழவியின் வார்த்தை பண்டைவாசனைக்கு

இழுத்துச் சென்றது. அதுபோல உயிர் முதல்வன் பாதம் அடைந்து விட்டது. ஆனால் உடல் இருக்கிறது. அந்த உடல் வினைப் பழக்கத்திலேயே பழகியிருந்தது. உலக விவகாரங்களில் ஏதாவது ஒன்றைப் பார்த்து விட்டால் அவ்வுடல் அங்கே இழுக்கப்படும். அது தான் இன்பம் என்று தவறுதலாய் நினைக்கும் ஆகவே அந்த வலைக்குள் சிக்கிக் கொள்ளக் கூடாது. மீன் நாற்றத்தை விட்டு நறுமண வாசனையை அனுபவிக்கப் பழக வேண்டும். அது செய்தால் மீன் வாசனை இழுக்காது. அவ்வித நற்பழக்கம் எதனால் உண்டாகும் என்று கூறுகிறேன்.

2. தொண்டருடன் கூடுதல்

ஆணவம், வினை, மாயை என்ற மும்மலங்களும் முதல்வனுடைய திருவடியைச் சேர ஒட்டாமல் தடுத்து நிற்பவை. அவைகளைக் கழித்து எறிந்து விட்டால்தான் அவன் திருவடி கிடைக்கும் என்று முன்னமே சொன்னோம். அவ்விதம் அவைகளை ஒரு முறை கழித்து விட்டாலும் பண்டைப் பழக்கத்தினால் அவைகள் என்னை மறுபடியும் இழுக்கும் ஆற்றல் உடையன என்றும் சொன்னோம். அவ்விதம் அதன் ஆற்றல் என்னை வென்று இழுக்காமல் இருக்க நான் கொள்ளக் கூடிய சாதனங்கள் எவை என்பது பற்றிச் சிறிது கூறுகிறேன்.

ஞானம் இல்லாத பிறரோ அஞ்ஞானமே ஊட்டுவர். அறிவுடையோர்களோ தங்களைப் போலவே என்னையும் ஆக்குவார்கள். ஆகவே அவர்களுடைய இணக்கத்தினால் பழைய சகவாசதோஷம் அண்டாது. புதுவினைகளும் என்னை ஒட்டாது.

3. சமயச் சின்னங்கள்

சைவச் சமயச் சின்னங்கள் திருவெண்ணீறும், உருத்திராக்கமும் ஆகும். அவை சமய நிலையை உணர்த்துவதற்கு இன்றியமையாதனவா என்ற கேள்வி வரும். உலக விவகாரங்களாகிய உடல் முதலியவை இருக்கும் வரையில் முதல்வனை நினைவு ஊட்டும் முறையில் அவைகள் சிறந்தவைகளே.

சேரமான் பெருமான் நாயனார் முன்னமே திருத்தொண்டு செய்து வந்த பெரியார். அவர் அரசு உரிமை பெற்றுப் பவனி சென்றார். சாதாரண ஆளாக இருக்கும் பட்சத்தில் செருக்கு ஏற்படும். அவர் ஒருநாள் யானை மீது நகர்வலம் வரும்போது எதிரில் ஒரு வண்ணான் அழுக்குப் பொதி சுமந்து கொண்டு வந்தான். அவன் உடலின் மீது உவர்மண் ஊறி வெண்ணீறு பூசியதுபோல வெளுத்து இருந்தது. பெருமாள் அதனைக் கண்டு திருநீறு பூசிய முனிவர் என நினைந்து இறங்கி வந்து அவனை அடி வணங்கினார்.

இது பித்தன் செயல்போல் தோன்றினும் திருநீற்றின் மீது வைத்த மதிப்பே அடியார் எண்ணத்தையும் முதல்வன் எண்ணத்தையும் கொண்டு வந்து ஊட்டியது. செருக்கு மறைந்தது. இதனால் திருவேடங்கள் முதல்வனிடத்து அன்பை உறுதிப்படுத்துவனவாகும் என அறிந்து கொள்ளலாம்.

நரகத்தின் வாயில்கள் மூன்று

1. காமம்
2. கோபம்
3. லோபம் (கருமித்தனம்)

4. சமய நிலையங்கள்

சமயச் சின்னங்களைப் போலவே சமய நிலையங்களும் உள்ளன. ஆலயம் முதலிய நிலையங்கள் முதல்வன் உருவவழிபாட்டிற்குப் பயன்படுவன. இவைகள் முழுதும் விடுதலை அடைந்த உயிர்களுக்கு வேண்டியதில்லை. ஆனால் உடல் கொண்டு உலகத்தில் இருக்கும் சீவன் முத்தர்களுக்கு வேண்டியவை. அந்நிலையங்களில் உள்ள சின்னங்கள் நினைவு ஊட்டும் முறையில் பெரும் பயன் அளிக்கும். அவைகள் சாதாரண மக்களுக்கு யாதொரு பயனும் அளிக்காமல் போனபோதிலும் பாசம் நீங்கியவர்களுக்கு மிகுந்த நன்மை பயக்கும்.

ஆகவே சமயச் சின்னங்களையும் சமய நிலையங்களையும் முதல்வனுடைய விளக்கம் மிகுந்த இடங்கள் என்று எண்ணி வழிபடுதலே சிறந்த பயன்தரும்.

5. இறுதி முத்தி நிலை

மேலே கூறியபடி முதல்வனது சின்னங்களையும் அவனது நிலையங்களையும் ஏற்றபடி அறிந்து வணங்கி அவன் அடியார்களுடன் உடன் உறைந்து அவர்களுக்குப் பணி செய்து ஒழுகினால் சீவன் முத்தன் வினை முதலிய கட்டுக்களுக்குள் மறுபடியும் அகப்பட்டுக் கொள்ளான். இவ்வாறு புனிதமான வாழ்வு வாழ்ந்து உடல் நீங்கிய உடனே பிறப்பில்லாத பேறு அடைவான். முதல்வன் திருவடிகளில் அழியாத இன்ப அன்பு நிலை பெறுவான்.

இந்த மேன்மையான நிலை பெறுவதற்கு முதல்வனுடைய திருவருட்கருணையே காரணமாக இருந்ததினால் அந்நன்றியை அந்த உயிர் ஒரு காலும் மறவாது. அவ்விதம் மறவாத நன்றி அவனை வழிபடுதலாலேதான் செய்ய முடியும். அப்போது முதல்வனும் உயிரும் ஆண்டான் அடிமை என்ற சிறந்த நிலைகளில் இருப்பார்கள். இந்த முறையாக உயிருடைய பிரபஞ்ச யாத்திரை இருக்கிறது. இதனையே இங்கு ஆராய்ந்தோம்.

ஆளுடைய அடிகள் அணிமாலை

[ஸ்ரீ மாணிக்கவாசகர் அருள் சரிதம்]

வித்துவான் அருள் விளக்கம் அண்ணாமலை அடிகள்



காப்பு

திருப்பெருந் துறையுறை சிவன்கழல் போற்றியே
ஆளுடைய அடிகள் அணிமாலை பாடுவனே.

நூல்

(கலிவிருத்தம்)

நீர்சூழ்ந்த நிலவுலகர் நெடுங்காலம் செய்தவத்தால்
பேர்பெற்ற தென்பாண்டி நன்னாடும் பிறங்கிடவே
சீர்கொண்ட திருவாத வூரதனில் அவதரித்தார்
ஏர்மிக்க மாணிக்க வாசகரெம் அடிகளுமே. 1

அடிகளவர் இளமையிலே அருங்கலைகள் அனைத்தினையும்
படியிலுளார் வியந்திடவே படித்துணர்ந்து ஞானியராய்
அடியுணர்வு கொண்டிலங்க அறிந்தபாண்டி மன்னனுந்தன்
மிடிதவிர அமர்த்தினனே அமைச்சரென மிளிர்ந்திடவே. 2

அமைச்சரென மிளிர்ந்தங்கு அருளாட்சி ஆளுகையில்
இமைப்பொழுதும் இறையடியை மறந்தறியா இயல்பினராய்
அமைந்திடவே பக்குவமும் அரனருளால் பாண்டியனும்
தமையழைத்துப் பரிவாங்கப் பணித்திட்டான் தவப்பயனே.

தவப்பயனால் சார்கின்றார் தனித்தபெருந் துறையதற்கே
தவக்கருணை யுடையாரும் சார்ந்தங்குச் சிவகுருவாய்ப்
பவந்தீர்க்கும் குருந்தமரத் தடிநிழலில் வீற்றிருக்கக்
கவலையறும் பேற்றினராய்க் கடிதுகழல் பணிந்தனரே. 4

பணிந்தவர்க்கே அருள்தீக்கை பண்ணியவர் பாட்டுகந்து
மணிமொழியே தில்லைநகர் வருகவென்று மறைந்தருள
மணியிழந்த நாகமதாய் மனம்பதைத்துப் பரவசராய்ப்
பணியேற்றுப் பரிப்பணத்தைப் பரிந்திட்டார் பரன்பணிக்கே

பரனடியில் பற்றவைத்துப் பணிபுரியும் பண்பிதனை
வரவறியாப் பாண்டியனும் ஆட்போக்கி வரப்பணித்தான்
தரவோலை வாங்கியதைத் தான்படித்து மயங்கிநிற்க
வரவைப்போம் பரிகளையே வரும்மூல நாளினிலே 6

நாட்குறித்துப் பரமனார் நவின்றவொலி தான்கேட்டு
நாட்கடந்து மதுரைநகர் நண்ணினரே நலமுடனே
வாட்கொண்ட வழுதியுநம் வாசகரைச் சிறையினிலே
ஆட்படுத்தி வருத்திட்டான் அரனாரும் நடுக்குறவே. 7

நடுங்கிநிலம் அதிர்ந்திடவே நமதீசன் பரிமீதில்
விடுபரிகள் சிவகணத்தர் விண்புழுதி எழுந்திடவே
கடுகிவரும் பவனிதனைக் கண்டஅரி மர்த்தனனும்
விடுவித்தான் மாணிக்கரை விரைந்துற்றார் பாகருமே 8

பாசுரென வருகைநந்த பரமசிவன் பரிகளையே
சாகசமாய் தந்திட்டார் தரமறியாப் பாண்டியனும்
வேகமுறப் பரிசளித்தான் விடைபெற்றார் வித்தகரும்
பாகமது பெண்கொண்டார் பரிசுணர்ந்தார் அடிகளுமே. 9

அடிகளவர் பொருட்டாக அமைந்தமாயப் பரிகளுமே
விடிவதற்கு முன்னதாக வியன்காட்டு நரிகளாகக்
கடிமதுரை நகரத்தார் கலக்கமுற ஊளையிட்டே
படிவமாறி ஓடினவே பாண்டியனும் வெகுண்டனனே. 10

வெகுண்டுமன்னன் வாதவூரர் வியன்ஜால வித்தையெனத்
தடுமாற்றங் கொண்டவனாய்த் தகுதண்டம் தந்திடவே
சுடுமணலில் வைகையிலே தொடுத்துபுரட் டிடவந்தோ
கடுகிவெள்ளம் பெருக்கெடுக்கக் கண்ணுதலார் அருளினரே.

அருமைநகர் அழியுமென அஞ்சிமன்னன் வைகைக்கரை
உருவழியா முன்னதாக உற்றடைக்க வேண்டுமெனத்
தெருவெங்கும் பறைசாற்றத் திரண்டுமக்கள் தமது பங்கை
ஒருமனதாய்க் கட்டிநிற்க ஒருத்தி வந்தி தவித்தனளே. 12

தவித்தவந்தி பிட்டுவிற்போள் தனதுபங்கைக் கட்டுவிக்கக்
குவித்தகையர் கூலியாளும் கிடைக்காமல் குலைநடுங்கிக்
''கவித்தகங்கை யுடையானே கருணைபுரி'' எனவேண்ட
கவித்தகூடைக் கூலியாளாய்க் கருணைவள்ளல் புறப்படவே

புறப்பட்ட புண்ணியனார் பொருத்துவந்திக் குடில்முன்னே
திறமைகாட்டி நின்றிடவும் தேர்ந்தபாட்டி யுளமகிழ்ந்தே
உறவுமகன் எனக்குநீயே உற்றடைப்பாய் பிட்டுதனை
அறவுனக்கே கூலியாக அளிப்பனென இசைந்தனரே. 14

இசைந்தவரும் பிட்டையுண்டே எடுத்தகூடை மண்ணிரப்பி
அசைந்தசைந்து வைகைக்கரை அடைப்பவர்போல்கொ ்டிநிற்க
வசைமொழியும் பலருரைப்ப வாய்த்தமரத் தடிநிழலில்
இசைந்துபடுத் துறங்கினராய் இருந்தனர்நம் ஈசனாரே. 15

ஈசனருள் விளையாட்டை யெண்ணாத பாண்டியனும்
பாசமுடன் பார்க்கவந்து கரையடையாப் பரிசறிந்தே
ஏசலுடன் கூலியாளை இழுத்துவரச் சொல்லியவன்
தேசமெங்கும் நிறைந்தபொருள் எனத்தெளிய அடித்தனனே.

அடித்தபிரம் படிமுதுகில் பட்டவுடன் அரனாரும்
இடித்தகரை எடுத்தமண்ணால் இட்டடைத்துமறைந்திட்டார்
அடித்தவடி அரசனுடன் அங்கிருந்தார் அனைவருக்கும்
படித்தலத்தில் எவ்வுயிர்க்கும் பட்டதம்மா பெருவியப்பே.

பெருகுகண்ணீர் வழியமன்னன் பேதலித்துப் பெருமானே
அருங்குதிரைச் சேவகனாய் அணைந்ததுவும் வைகையினில்
பெருகுவெள்ளம் வந்ததுவும் பிட்டுக்குமண் சுமந்ததுவும்
பெருவினையேன் பிரம்படியைப் பட்டதுவும்எவர்பொருட்டே

எவர்பொருட்டோ எனவெண்ணி ஏங்கிநைந்து வாசகரைத்
தவவேண்டி விடுவித்தும் தக்கபடி உபசரித்தும்
''அவமேநான் செய்திட்டேன் அடிகளெனை மன்னிப்பீர்
சிவமேநீர்'' எனத்தொழுது திருவடியில் வீழ்ந்தனனே. 19

வீழ்ந்தமன்னன் தொழுதெழுந்து ''விமலனடி போற்றிநிற்பீர்
வாழ்ந்திடுவீர் உலகுய்ய'' எனப்போற்றி வழிவிடுத்தான்
ஆழ்ந்தகாதல் மிகுந்திடவே அடிகளாரும் ஆலவாயின்
சூழ்ந்தகழல் கூத்தரசைத்தொழுது சென்றார் பெருந்துறைக்கே

பெருந்துறையில் ஆட்கொண்டு பிரிந்துசென்ற சிவகுருவும்
வருந்துறையை எதிர்நோக்கி வருந்துவாத வூரர்பாடும்
அரும்பணிக்கே விடுத்தநிலை அறியாராய் அடிபோற்றும்
பெருமைமிக்க பாடல்களும் பிரியமுடன் புகன்றனரே. 21

புகன்றசிவ புராணமுதல் பொருந்துமச்சோ பத்துவரை
அகமுருகப் பாடுவாராய் அரியபெருந் துறைநீங்கி
மிகவிழையுத் தரகோச மங்கையையும் மேவியேத்த
தகவுடனே திருக்காட்சி தந்திட்டார் சங்கரரே. 22

சங்கேந்தும் திருமாலும் தாமரைசேர் நான்முகனும்
எங்குசென்றுங் காணகில்லா ஈசன்காட்சி கண்டுவரும்
புங்கமிகு வாசகரும் பலதலங்கள் போய்த்தொழுதார்
பொங்குமின்ப இடைமருதே போற்றுதிரு வாரூரே. 23

ஆர்சூடும் அத்தனவன் அடிமறவா அடிகளாரும்
பேர்கொண்ட சீகாழிப் பதிசேர்ந்து பேணுகையில்
வார்கொண்ட கொங்கைபங்கன் வந்துதிருக் காட்சிநல்க
ஆர்வமெழத் திருவண்ணா மலைநகரும் அடைந்தனரே 24

அடைந்தங்குப் பாவையுடன் அம்மானை பாடியபின்
விடைகொண்டு திருக்காஞ்சி மேவிப்பணிந் தேகுவாராய்
நடையிட்டுக் கழுக்குன்றம் நண்ணிநிற்க மறையீசன்
தடையில்லாத் திருக்கோலக் காட்சிதந்தார் சாமிகட்கே. 25

காட்சிகண்டு களித்தவராய்க் கடுகிதில்லை நகரடைந்து
மாட்சிமிகு கூத்தரசன் மலரடியைக் கண்டுபோற்றி
ஆட்சியுற்று வாழ்ந்திருக்க அரனாரும் அந்தணராய்
சாட்சிநிற்க அடியார்க்கு அடியரெனச் சார்ந்தனரே. 26

சார்ந்தகிழ அந்தணரும் தமிழமுதம் மாந்திடவே
ஆர்வமுற்று வந்துநிற்க அடிகளாரும் வரவேற்றே
ஊர்பேரும் வினவாமுன் உற்றசெயல் யாதென்ன
கார்வண்ணன் காணாத கர்த்தரவர் கழறுவரே. 27

''கழறுவீர் நும்பாக்கள் கைப்படநான் எழுதியோதி
விழலுக்கே இறைக்காமல் காலத்தை விரும்பிடுவேன்
மழவிடையார் அடிபரவும் வாசகரே'' எனவேண்ட
அழலுருவைச் சிந்தித்து வாசகத்தை அருளினரே. 28

அருமைதிரு வாசகத்தை எழுதிக்கொண்ட அந்தணரும்
மருள்போக்கும் மாணிக்க வாசகரை மகிழ்ந்துநோக்கித்
தெருளுடையீர் பாவைதனைச் செப்பியநும் திருவாயால்
ஒருகோவை நூலினையும் ஓதிடுக என்றனரே. 29

ஓதுவாராய்ச் சிந்தித்து உயர்ஞான நிலைநின்று
யாதுமொரு தடையின்றி யாப்புறுக் காரிகையால்
மாதுவிழை அம்பலவன் மகிழ்ந்திடவே திருக்கோவை
சாதுமகிழ்ந் தெழுதிடவே சாற்றினர்நம் சதுரருமே. 30

சதுரர்க்குச் சதுரரெனச் சார்ந்தவருள் அந்தணரும்
இதுகாமம் கண்ணியநல் எழில்ஞானப் பனுவலெனப்
புதுமைகொள் அடிகளிடம் புங்கவரும் விடைபெற்றுப்
பொதுமன்றில் நூல்களிட்டுப் போயொளித்து மறைந்தனரே.

மறையவராம் அர்ச்சகரும் மன்றினிடை வியப்புடனே
இறைவைத்த நூல்களையே ஏந்தினராய் அடிகளிடம்
உறைபொருளுங் கூறுகென உற்றமன்றம் ''கூத்தனாரே
நிறைபொருளாம்'' எனவருளி நெடுஞ்ஜோதி நீர்மையரே.

போற்றி

போற்றியோ மாணிக்க வாசகநும் புகழ்சரிதம்
போற்றியோ மாணிக்க வாசகநும் பொருள்நூல்கள்
போற்றியோ மாணிக்க வாசகநும் பொற்கழல்கள்
போற்றியோ மாணிக்க வாசகநும் பெருந்துறையே

மாணிக்கவாசகர் திவ்விய திருவடிகளே சரணம்.

கந்தவேள் கருணை

டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

[43]

''விநயமாகப் பேசுவது போலப் பேசியே உன்னைப் பற்றி நீ தற்பெருமை அடித்துக் கொள்கிறாய். போர்ப் பயிற்சி பெறாதவர்களையும், நகரில் உள்ள பாமரர்களையும் வெல்லுவதுதான் சுத்த வீரனின் ஆண்மையோ? உன்னையும் உன் தரப்பினர் அவ்வளவு பேரையும் வதைக்க வந்துள்ளேன். சிறையில் சிக்கியுள்ள தேவர்களைச் சிறை விடுக்க வந்துள்ள நீங்கள் உங்கள் உடலில் அடைப்பட்டுள்ள உயிரைவிடுத்துப் போவீர்கள்'' என்று இடி போல் கர்ஜித்தான் சிங்கமுகாசுரன்.

சிங்கமுகாசுரனின் வீர கர்ஜனையைக் கேட்ட வீரவாகு தேவர் நகைத்துப் பதினெட்டு கணைகளைச் சிங்கமுகாசுரன் மீது செலுத்தினார். அத்தப் பாணங்கள் அவன் மார்பில் பட்டுப் பயனற்று வீழ்ந்தன. தொடர்ந்து இருவருக்கும் வெகு உக்கிரமான போர் நடைபெற்றது. சிங்கமுகாசுரன் தன் கையிலிருந்த சூலப் படையைச் சுழற்றி வீரவாகு தேவர் மீது வீசினான். விண்வழியே வந்த அந்தச் சூலத்தின் ஆற்றலைக் கண்ட வீரவாகு தேவர் அதனை எதிர்த்து ஆயிரம் பாணங்களை விடுத்தார். சூலப்படை அந்தப் பாணங்களையும் வீழ்த்திவிட்டு வீரவாகு தேவரை நோக்கிச் சென்றது. இதனைக் கண்ட இலக்கத்தெண்மரும் வீரர்களும் கலக்கமடைந்தனர். தம்மை நோக்கி வந்த சூலப்படையை வீரவாகு தேவர் சிவபெருமான் அளித்த வாள் படையால் இரு துண்டங்களாக வெட்டினார். சினம் பொங்கச் சிவப் படைக்கலத்தை எடுத்து வழிபாடு செய்து ''சிங்கமுகாசுரனைக் கொல்வாயாக'' என்று விடுத்தார். சிங்கமுகாசுரனும் அதற்கெதிராக இன்னொரு சிவப்படைக்கலத்தையே வழிபாடு செய்து விடுத்தான். இருவரில் எவருமே அழியவில்லை. சிவப்படைக்கலங்கள் இரண்டும் ஒன்றொடு ஒன்று வந்து கலந்து தம்மைச் செலுத்தியவர்களிடமே திரும்பிச் சென்றன.

சிங்கமுகாசுரனைக் கொல்ல முடியவில்லையே என்று வீரவாகு தேவர் பெரிதும் வருந்தினார். ஆறுமுகக் கடவுளிடம், 'தாங்கள் இவனொடு யுத்தம் புரிய வேண்டாம்; நானே இவனை முடிப்பேன்' எனத் தாம் கூறியது தவறோ?' என்று எண்ணினார். 'இவனது ஆற்றலைக் காணுங்கால் ஆறுமுகக் கடவுளின் திருக்கரத்திலுள்ள படைகளாலன்றி வேறு எவற்றினாலும் இறக்கமாட்டான் என்றே தோன்றுகிறது. ஆயினும் இவனது தேரையும் படைக்கலங்களையும், சேனைகளையுமாவது அழிப்பேன்' என்று கருதினார் வீரவாகு. சிங்கமுகாசுரனின் தேரை அழித்தார். அந்தச் சமயம் பார்த்துப் பூதவீரர்கள் சிங்கமுகாசுரனைச் சூழ்ந்து மலைகளையும் படைக்கலங்களையும் வீசிப் போர் செய்தார்கள். சிங்கமுகாசுரனின் தேர் அழிந்து விட்டதால் அவன் வேறொரு தேரில் ஏறி ஆயிரம் கைகளிலும் வில்லும் அம்பும் எடுத்துக் கொண்டு அளவற்ற பாணங்களை விடுத்தான். அந்தப் பாணங்கள் தாக்கிடுதால் போருக்கு வந்த பூதர்கள் மாண்டனர். சிங்கமுகாசுரனின் பாணத்தினால் தாக்கப்படாத உடலே இல்லையென்றாகிவிட்டது.

வீரவாகுவும் சிங்கமுகனும் இலட்சக் கணக்கான பாணங்களால் பரஸ்பரம் தாக்கிக் கொண்டனர். சிங்கமுகாசுரன் பெருஞ் சீற்றத்துடன் இரண்டாயிரம் பாணங்களைச் செலுத்தினான். அந்தப் பாணங்களால் வீரவாகு தேவரின் கையிலிருந்த வில் வெட்டுண்டு வீழ்ந்தது. அவர் வேறொரு வில்லை எடுப்பதற்கு முன் சிங்கமுகாசுரன் கணை மழை பொழிந்து அவர் மார்பைத் துளைத்தான். வீரவாகுதேவர் வெகுண்டு சிங்கமுகாசுரனின் தேரை அழித்து அவன் ஆயிரம் விற்களையும் அழித்தார். அது கண்ட வானவரும் நான்முகனும், நாரணரும் ஆர்த்தனர். அதனால் சிங்கமுகாசுரன் நாணமடைந்தான்.

வீரத்தால் செய்வதற்கு இனி ஏதுமில்லை என்று கண்ட சிங்கமுகாசுரன் தனது தாயாகிய மாயை அளித்த மாயா பாசத்தை எடுத்து வீச பிரளய கால இருளைப் போன்ற அந்த காரத்தைப் பரப்பிச் சென்ற அந்த மாயா பாசம், ஏழு கடல்களும் ஒன்று சேர்ந்து மணல்களை வாரியடித்துக் கொண்டு செல்வதுபோல வீரவாகு தேவர் முதலிய இலக்கத்தொன்பதின்மரையும் ஏனைய பூதர்களையும் மயக்கி அடித்துச் சென்று உதயகிரியில் வைத்தது. தமது உணர்வுகளின் அஸ்தமனத்தை அடைந்த பூத வீரர்கள் உதயகிரியில் மயங்கிக் கிடந்தனர்.

போர்க்களத்தில் எதிர்த் தரப்பிலிருந்த படைகளையெல்லாம் சிங்கமுகன் உதயகிரிக்கு உருட்டிவிட்டான். இனி ஆறுமுகரும், இது வரை போர்க்களம் வரா பூதப் படைகளும் தான் அவனோடு போருக்கு வரவேண்டும். ''சிவகுமாரன் எனக்குப் பயந்து ஓடி ஒளிவானோ? அல்லது இவ்வளவு நடந்த பின்னும் தைரியமாகப் போருக்கு வருவானா? அந்தப் பாலகன் எங்குள்ளான்?'' என்று அண்டங்கள் வெடிக்கும்படி ஆரவாரம் செய்து கூறினான்.

ஓர் ஒற்றன் அவனிடம் வந்து, ''சிவ குமாரன் ஆயிரம் வெள்ளம் பூதப் படை களுடனும், சேனைத் தலைவர்களுடனும், பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலியோருட னும் பாசறையில் இருக்கிறார்'' என்று கூறி னான. அதைக் கேட்டு நகைத்த சிங்கமுகா சுரன், ''அவர்கள் இங்கு என்னை எதிர்க்க வருவர் என எதிர்பார்த்து காலதாமதம் செய்வதில் பொருள் இல்லை. பயந்து ஒளிந் திருக்கும் அந்தப் பாலகனையும் படையினரை யும் இப்பொழுதே அவர்களது பாசறைக்கு சென்று கொல்வேன்'' என்று கோஷித்தான். அவ்வாறே பாசறை நோக்கிப் போருக்குப் புறப்பட்டான்.

சிங்கமுகாசுரன் வருவதை அறிந்த தேவர்கள் வாட்டமடைந்து குமாரக் கடவு ளிடம் நிகழ்ந்தவற்றையெல்லாம் கூறினார்கள். பெருமான் புன்முறுவல் செய்தார். பாசறை யினின்று வெளிவந்தார். தம்முடைய தேரைக் கொண்டு வரும்படி பணித்தார். அதன்படி வாயுதேவன் மனோவேகத் தேரைக் கொண்டு வந்து நிறுத்தினான்.

''நாமே புறப்படுவோம்'' என்றார் சுவாமி.

சாம்பூநதம் என்ற பொன் ஆயிரம் மாற்றுத் தங்கம். அவற்றில் நவரத்தினக் கற்கள் பதிக் கப்பட்ட பாதுகைகளைச் சிருஷ்டி கர்த்தாவும் சரஸ்வதி காந்தனுமான பிரமதேவன் சரவண பவருக்குச் சமர்ப்பித்தார். அந்த இரத்தினப் பாதுகையின்மீது தமது இரத்தினத் திருவடி வைத்துப் புறப்பட்டார் சுவாமி. தேவேந்திரன் தங்கப்பிடி போட்ட வெண்சாமரம் வீசினான். முப்பத்து மூன்று கோடி தேவர்களும் ஆல வட்டம் வீசினார்கள். சூரியனும் சந்திரனும் வெண் கொற்றக் குடை பிடித்தார்கள். அறக் கடவுள் உடைவாள் ஏந்தி வந்தான். இயக்கர் தலைவனான குபேரன் தாம்பூலப் பெட்டி தாங்கினான். வருணன் படியகம் ஏந்தினான்.

''இந்திரன் கவரி சாய்ப்ப இமையவர் வட்டம் வீசச்

சந்திரன் தபனன் என்போர் தண்ணிழல் கவிப்புத் தாங்க

அந்தகன் உடைவாள் பற்ற இயக்கர்கோன் அடைப்பை கொள்ளச்

சிந்துநீர் அரசன் செம்பொற் படியகம் ஏந்தச் சென்றான்''

சகல தேவர்களும் கைங்கரியம் செய்ய, சகல தேவர்களுக்கும் நாயகரான சுவாமி மனோவேகத் தேரில் தமது மனோகரமான பாதம் பதித்து ஏறி வீற்றியருளினார். கடல்கள் நாணும்படி ஆயிரம் வெள்ளம் பூதர்கள் ஆர வாரம் செய்து சூலம், மழு, எழு, மலை முதலியவற்றை ஏந்தி எம்பெருமானைச்

சூழ்ந்து சென்றார்கள். பானுகம்பன் என்றொரு பூத வீரன் அவனுக்கு இரண்டாயிரம் கைகள்; இரண்டாயிரம் கால்கள், இரண்டாயிரம் கைகளிலும் இரண்டாயிரம் வலம்புரிச் சங்கங்களை எடுத்து ஊதினானாம்.

''மூவர்கள் முதல்வன் வந்தான் முக்கணான் குமரன் வந்தான்
மேலவர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தான்
ஏவருந் தெரிதல் தேற்றா திருந்திடும் ஒருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான் என்றன சின்னமெல்லாம்.''

''மும்மூர்த்திகளுக்கும் முதல்வன் வந்தான் சிவகுமாரன் வந்தான்; பகைவர்கள் என்னும் யானைகளுக்கு ஆண் சிங்கமாயுள்ளவன் வந்தான்; வேற்படை வீரன் வந்தான்; யாவரும் அறிதற்கரிய தனி முதல்வனாகிய பெருமான் வந்தான். தேவாதி தேவன் வந்தான்'' என்று சின்னங்கள் கட்டியம் ஒலிக்கச் சுவாமிநாதர் போர்க்களம் வந்தார்.

சிங்கமுகாசுரனும் படைகளோடு வந்து எதிர்த்தான்.

இருதிறப் படைகளும் போர் செய்தபோது அவுணர் பலர் அழிந்தார்கள். அதனைக் கண்ட சிங்கமுகாசுரன் மிகப்பெரிய மாயாவுருவத்தையெடுத்து, தேவர்கள் நடுநடுங்க வந்து இரண்டாயிரம் கரங்களால் ஆயிரம் வெள்ளம் பூத வீரர்ளையும் எடுத்து விழுங்கிவிட்டான். ''இனி நம்மையும் சிங்கமுகாசுரன் விழுங்கிவிடுவான்' என்று தேவர்கள் ஓடி ஒளிந்தார்கள். சிங்கமுகாசுரனின் வயிற்றுக்குள் சென்ற பூதர்கள், ''இத்துணைக் காலமாகப் போரிலேயே ஈடுபட்டிருந்ததால் எம்பெருமானை அதிகம் துதிக்க இயலவில்லை. சிவபெருமானைத் தியானிப்பதற்கு மற்றைய இடங்களைவிடச் சிங்கமுகாசுரனின் வயிறே ஏற்ற இடம்'' என்று இருந்து விட்டனர்.

இதுகாறும் வீரமகேந்திரபுரத்துக்குத் தோல்விச் செய்தியே எடுத்துச் சென்ற தூதர்கள் சூரபன்மனிடம் ஓடிச் சென்றனர். இன்று வெற்றிப் பெருமையுடன், சிங்கமுகாசுரன் வீரவாகு முதலிய இலக்கத்தொன்பதின்மரையும் ஆயிரம் வெள்ளம் பூதர்களையும் மாயத்தினால் மயக்கி உதயகிரியில் வைத்திருப்பதையும், முருகனோடு வந்த ஆயிரம் வெள்ளம் பூதர்களையும் விழுங்கிவிட்டதையும் கூறினர். ''இனி முருகன் அழிவான்'' என்று ஆர்ப்பரித்தனர்.

சூரபன்மன் மிகவும் மகிழ்ச்சி கொண்டான். அரியணையிலிருந்து இறங்கிச் சென்று தூதர்களை அன்புடன் தழுவிக் கொண்டான். அருகிலிருந்த ஏவலைநோக்கி ''ஊரிலுள்ள பல சேனைகளையும் திரட்டிச் சிங்கமுகனுக்கு உதவியாக அனுப்பு'' என்று ஆணையிட்டான். பறையறிவிக்கப்பட்டது. மகேந்திரபுரியிலுள்ள சேனா வீரர்கள் ஆரவாரத்துடன் அணிவகுத்துச் சிங்கமுகாசுரன் நின்று கொண்டிருந்த போர்க்களத்தை யடைந்தனர்.

தன் தம்பியின் போர்த் திறத்தைத் தானே காண வேண்டும் என்று எண்ணிய சூரபன்மன் கோபுரத்தின் மீது ஏறி நின்று போர்க்களத்தை நோக்கினான். முருகவேள் தனித்திருப்பதையும் தன் தம்பியின் வெற்றியையும் கண்டு நகைத்தான். ஏக நாயகனாகிய சுவாமி ஏகாந்தாமாயிருப்பதன் உட்பொருளை அவன் எப்படி அறிவான்?

சிங்கமுகாசுரன் பூத வீரர்களை விழுங்கியதைக் கண்ட முருகவேள், போர் செய்யும் திருவிளையாடலைப் புரிய வேண்டும் என்று திருவுளங் கொண்டார்; முறுவல் பூத்துக் கொண்டே முன்னணிக்கு வந்தார். அவுணப் படை வீரர்கள் பெரும் ஆரவாரம் செய்து அவரைச் சூழ்ந்து பாணங்களை ஏவினார்கள். குமாரக் கடவுள் வில்லையெடுத்து நாணொலி செய்தார். அந்த 'டங்கார' நாதத்தைக் கேட்ட அவுணப்படை வீரர்கள் கைகளிலிருந்த ஆயுதங்களை நழுவவிட்டனர். யானைகளும் குதிரைகளும் அவ்வொலியைக் கேட்டு வீழ்ந்தன. தேர்கள் அதிர்ந்து சிதறின. அதனை கண்டு வியந்த சிங்கமுகாசுரன் குமாரக் கடவுளின் திருமுன் வந்தான்.

கந்தவேளும் சிங்கமுகாசுரனும் இப்போது தான் முதன் முதலில் சந்திக்கின்றனர். முதல் சந்திப்புக்கு எப்பொழுதும் பெருமை உண்டு.

''சுவாமீ, சுவாமீ என்று பேசப்படும் முருகன் சின்னக்குழந்தையாக அல்லவா இருக்கிறான்?'' என்று தனக்குள் கூறிச் சிரித்துக் கொண்டான் சிங்கமுகாசுரன்.

சுவாமி பரம்பொருள் என்பது சிங்கமுகாசுரனுக்குத் தெரியும். ஆனாலும் போர்க்களம் அல்லவா? அறிவு மயங்கும். இது இறைவன் திருவிளையாடல். சிங்கமுகன் ஷண்முகரிடம் பேசலானான்;

''கண்ணுதல் முதல்வன் மைந்த கழறுவன் ஒன்று கேண்மோ
எண்ணவர் வலியை மாற்றல் இறையவர் கடனே அற்றால்
விண்ணவர் தமைத் தண்டித்தோம் அவர்களும் அல்லைவேறொர்
தண்ணலன் எமருக் கில்லை நடந்ததென் அமருக் கென்றான்''

''சிவகுமார! ஒரு விஷயம் சொல்கிறேன். கவனமாய்க் கேள். பிராமண தர்மம் வேறு: சத்திரிய தர்மம் வேறு, யார் என்ன சொன்னாலும் பொறுமையாக இருப்பவர் பிராமணர். சத்திரியரால் அப்படி இருக்க முடியாது; இருக்கவும் கூடாது. பகைவர்களை (எண்ணவர்-பகைவர்) அடக்கி ஒடுக்குவது ராஜ தர்மம். அந்த ராஜ தர்மத்தின்படி பகைவர்களை அடக்க வேண்டுமாதலால் நாங்கள் தேவர்களைச் சிறையில் வைத்தோம்; அதிலே தவறு என்ன இருக்கிறது'' என்று கேட்டான் சிங்கமுகன். (தொடரும்)

அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

குங்குலியக் கலயநாயனார் திருக்கடவூரில் வாழ்ந்த ஓர் அந்தணர். சிவபெருமானிடம் உருகிய அன்புகூர்ந்த சிந்தையர்; ஒழுக்கசீலர்; நாள்தோறும் இறைவனுக்குக் குங்குலியத் தூபம் இடுவதை விரதமாகக் கொண்டவர்.

சிவ வழிபாட்டில் திருவிளக்கும் தூபமும் இன்றியமையாதன. இதனை அப்பர் பெருமான் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார்:

''விரும்பி நல்விளக்குத் தூபமும்
விதியினால் இடவல்லோர்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார்
கடவூர் வீரட்டனாரே''

(திருநேரிசை)

கலயர் என்பதே திருக்கடவூர் இறைவனின் பெயர். கலயம், கலசம், கடம் முதலியன ஒரே பொருளைக் குறிப்பனவாம்.

தேவர்கள் கொண்டுவந்த அமிர்தகலசமே சிவலிங்கமாக உருக்கொண்டு ஊன்றிய இடம் ஆனதால் திருக்கடவூர் என்று தலத்திற்கும் கலயர் என்று மூர்த்திக்கும் பெயர் வழங்கலாயிற்று.

தாம் செல்வ நிலையில் தொடங்கிய குங்குலியப் பணியைப் பின்னர் வறுமையுற்ற காலத்திலும் விடாது செய்து வந்தார். அதற்காக நிலபுலன்களையும் மற்ற பொருள்களையும் விற்றார். இனிவிற்பதற்கு ஒன்றுமிலலை, கடன்கொடுப்பார் யாருமில்லை என்ற ஒரு நிலை ஏற்பட்டது. மக்களும் மனைவியும் சார்ந்த சுற்றமும் இரண்டுநாள் பட்டினி கிடந்து தவித்தனர்.

தாம் பெற்ற பிள்ளைகள் பட்டினியால் வருந்துவதைச் சகிக்க முடியாது. கணவரை அணுகினள் நாயனாரின் மனைவியார். திருமண நாளில் அவர் தம் கழுத்தில் கட்டிய மங்கலநாணில் விளங்கிய பொற்றாலியைக் கழற்றிக் கொடுத்து ''இதனைக் கொண்டு நெல் வாங்கிவாரும்'' என்றாள்.

''யாதொன்றும் இல்லை யாகி
இரவுபகல் உணவு மாறிப்
பேதுறும் மைந்த ரோடும்
பெருகு சுற்றத்தை நோக்கிக்
காதல் செய் மனைவியார் தன்
கணவனார் கலயனார் கைக்
கோதில் மங்கலநூல் தாலி
கொடுத்து 'நெற்கொள்ளும்'
என்றார்.''

(பெரிய புராணம்)

ஒரு சுமங்கலிப் பெண் இப்படிச் செய்வது தகுமா என்று கேட்கத் தோன்றுவது இயல்பு.

பண்டைய நாட்களில் மஞ்சள் நூல் மட்டுமே மங்கல நாணாக விளங்கியது. அதில் ஒரு தங்கத் தாலியை தொங்கவிடுவது பிற்கால வழக்கமென்பது அறிஞர் முடிவு. அதற்கு ஆதாரமாகத் திருவிளையாடல் புராணத்தில் மீனாட்சியம்மையின் திருமணத்தில் சொக்கநாதப் பெருமான் 'மங்கலநாண் சாத்தினார்' என்று கூறப்பட்டிருப்பதை காணலாம்.

''சுற்று நான்மறைகள் ஆர்ப்பத்
தூரியம் சங்கம் ஏங்கக்
கற்றநான்முகத்தோன் வேள்விச்
சடங்குநூல் கரைந்தவாற்றால்
முற்ற மங்கல நாண் சாத்தி
முழுதுலகம் ஈன்றாள் செங்கை
பற்றினன் பற்றில்லார்க்கே
வீடருள் பரமயோகி.''

இப்பாடலில் பரஞ்சோதியார் நகைச்சுவையுடன் ஒரு பேருண்மையை விளக்குவது காண்க.

பற்றில்லாதவர்க்கே வீடுபேறு அருளும் பரமயோகியான இறைவன் இப்பொழுது மீனாட்சியின் செங்கையைத் தானே பற்றினான் எனக் கூறுகிறார். திருப்பரங்குன்றத்தில் முருகப் பெருமான் தெய்வயானையம்மையைத் திருமணம் செய்து கொண்ட பொழுது மங்கல நாணை அணிவித்ததாகக் கந்த புராணம் கூறுகின்றது.

'' செங்கமலத்து இறை சிந்தையின் ஆற்றி
அங்கையின் ஈந்திட ஆண்டகை கொண்டு
மங்கல நாணை மணிக்களம் ஆர்த்து
நங்கை முடிக்கோர் நறுந் தொடைசூ ...ள்''

ஆகவே கலயனாரின் துணைவியார் கொடுத்தது மங்கல நாணையல்ல; அதற்கு அழகு செய்வதற்காகவும் குலப்பிரிவைக் காட்டுவதற்காகவும் இணைக்கப் பெற்ற பொற்றாலியேயாகும். அதனால் அதனை ஓர் அமங்கலச் செயலாகக் கருதுதல் கூடாது.

மக்களின் பசித்துன்பத்தைத் தந்தையினும் தாயே நன்கு உணர்வாள். தம்மிடம் பொற்றாலியைத் தவிர வேறு விலை போகக் கூடிய ஏதும் இல்லை. அதனால் அதைக் கணவரிடம் கொடுத்து நெல்வாங்கி வரச் சொன்னாள். கணவரும் வாங்கி வருவார் என்று உறுதியாக நம்பினாள்.

நாயனாரோ குடும்பப் பற்றினும் இறைப் பற்று மிக்கவர். தம் குங்குலியத் திருப்பணி தடையின்றி நடைபெற வேண்டுமென்ற ஒரே கவலையுடன் நெல்வாங்கச் சென்றார். திண்ணமாய் எண்ணியர்எண்ணியஎய்துவர் என்பதற்கு இணங்க எதிரில் குங்குலியம் விற்போன் ஒருவன் வந்தான். பெரும்பேறு பெற்றதாக நாயனார் மகிழ்ந்தார். நெல் வாங்கவேண்டுமென்பதை மறந்தார். பொற்றாலியைக் கொடுத்துக் குங்குலியப் பொதியை வாங்கினார்.

அக்குங்லியப் பொதியுடன் வீரட்டானத்துத் திருக்கோயிலுக்கு விரைந்தார். இரவு நேரம். ஆகவே அங்கு தங்கி அயர்ந்து தூங்கிவிட்டார்.

பசியால் வாடும் மக்கள் உணவிற்காக நெல் வாங்கிவரக் கொடுத்த பொற்றாலி இறைவன் குங்குலியத் தூபத்திற்காயிற்று. அது அம்மையார் அறியாது செய்த ஒரு பெரும் புண்ணியமாயிற்று. அதன் நற்பயன் உடனே கிட்டியது.

கணவனார் வரவை எதிர்பார்த்து வெகு நேரமாகியும் வராதது கண்டு சோர்ந்து அம்மையாரும் மக்களும் அயர்ந்துதூங்கிவிட்டனர்.

அன்பர் உற்ற துன்பைப் போக்கக் கருணைவள்ளல் உள்ளங் கொண்டார். அதை நிறைவேற்ற குபேரனுக்குக் ஆணையிட்டார்.

கலயனார் இல்லத்தில் பொன்னும் நெல்லும் பல்பொருளும் பட்டும் ஆபரணங்களும் மலையாகக் குவிந்துவிட்டன.

அருந்தவமாற்றிய அவ்வம்மையார்க்குச் செல்வத்தைப் பொழிந்த இறைவன் அவர் கனவிலும் தோன்றி அதை அறிவித்தார். விழித்து எழுந்தவர் வீடுமுழுவதிலும் குவிந்து கிடக்கும் பொருள்களைக் கண்ணுற்று வியந்தார்.

கோயிலில் தூங்கும் கலயனார் கனவிலும் இறைவன் தோன்றி ''இல்லத்திற்குச் சென்று பாலுடன் சோறு உண்டு பசி ஆறுக'' என அருளினார். வீட்டிற்கு விரைந்தார் கலயனார்; அங்கு செல்வப் பொலிவைக் கண்டார்; வியந்தார்! திருவருளைத் துதித்தார்.

அம்மையார் கணவரையும் அவருடன் வந்த சிவனடியார்களையும் வரவேற்று அறுசுவை உணவுபடைத்தாள். என்னே தொண்டர் தம் திருத்தொண்டின் பெருமை !

டாக்டர் இரா. நாகசாமி (2)
தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் (ஓய்வு)

காட்சி 7

யாழ்ப்பாணரின் உறவினர்கள், பாணரின் புகழ் கேட்டு மகிழ்கின்றனர். யாழ்ப்பாணர் தமது யாழில் இசைப்பதால்தான் பதிகங்கள் சிறப்பெய்துகின்றன எனக் கூறுகின்றனர். இது கேட்டுப் பாணர் வருந்துகிறார். சம்பந்தரின் பாடலால்தான் யாழிற்குப் பெருமை என உலகுக்கு அறிவிக்க விரும்புகிறார். தமிழிசையால் தான் யாழிற்குச் சிறப்பெனக் காட்டப் பதிகம் பாடச் சம்பந்தரை வேண்டுகிறார். 'மாதர் மடப் பிடியும்' என்ற பதிகத்தைச் சம்பந்தர் பாட, யாழ்ப்பாணரால் அதை யாழில் வாங்கி வாசிக்க இயலவில்லை. நொந்துயாழை முறித்து எறிய முற்படுகிறார். அதை தடுத்துச் சம்பந்தர், பரமனின் அருள் முழுவதையும் கருவிகளுள் அடக்க இயலாது என ஆறுதல் கூறுகிறார். அன்றிலிருந்து அப்பதிகம். 'யாழ் மூரி' என்ற பெயர் பெற்றது.

யாழ்மூரிப் பதிகம்

பண் : யாழ்மூரி

அடாணா— ரூபகம்.

மாதர் மடப்பிடியும்மட அன்னமும் அன்னதோர்
நடைஉடை மலைமகள் துணைஎன மகிழ்வர்
பூத இனப்படை நின்றுஇசை பாடவும் ஆடுவர்
அவர்படை சடைநெடு முடியதோர் புனலர்
வேதமோடேழிசைபாடுவர்ஆழ்கடல்வெண்திரை
இரை நுரை கரைபொருது விம்மிநின்று
அயலே
தாதவிழ் புன்னை தயங்கும் மலர்ச் சிறை
வண்டறை
எழில்பொழில் குயில்பயில் தருமபுரம் பதியே.

காட்சி 8

[சம்பந்தருக்குப் பூணூல் அணிவித்தலும் நாவுக்கரசின் வருகையும்.]

சம்பந்தருக்குச் சிவபாத இருதயர் பூணூல் அணிவித்துக் காயத்ரி மந்திரம் உபதேசிக்கிறார். அப்பொழுது அங்குக் குழுமியிருந்த மறையவர்களுக்கு, ஞானசம்பந்தர் வானவர்க்கும் அந்தணர்க்கும் அனையவர்க்கும் மந்திரம் 'நமசிவாய' என்னும் பஞ்சாட்சர மந்திரமே என உபதேசிக்கிறார்.

பண்— காந்தார பஞ்சமம்

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓங்கிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே

சம்பந்தரின் பெருமை கேட்டுத் திருநாவுக்கரசு பெருமான் அங்கு வருகிறார். ஞானக் குழந்தையும் வாகீசப் பெருந்தகையும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு மட்டில்லா மகிழ்ச்சிக் கடலில் திளைக்கின்றனர். ஞான சம்பந்தர், 'காதலாகிக் கசிந்து' என்னும்பதிகம் பாடுகிறார். சம்பந்தரின் வேண்டுகோளுக்கு இணங்க அப்பர், ஆரூர்ப்பெருமான் மீது தாம் பாடிய பாடலைப் பாடுகிறார். இருவரும் வீழிமிழலைக்குச் செல்கின்றனர். சம்பந்தர் 'விதிவழிமறையவர்' என்னும் பதிகம் பாடுகிறார்.

[நாவுக்கரசு சீர்காழிக்கு எழுந்தருளச் சம்பந்தர் வரவேற்றல்]

கீரவாணி— ஆதி

அண்ணலே வருக அப்பரே வருக
ஆனேறு ஊர்ந்தார் அடியினைப் பரவும்
அன்பரே வருக ஞானியே வருக
நாவுக் கரசே வருக வருகவே

[ஞானசம்பந்தர் பதிகம் பாடல்.]

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயமே.

[சம்பந்தர் வேண்டுகோளுக்கு ஏற்ப நாவுக்கரசர், தமது பதிகம் ஒன்று பாடல்.]

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடை ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னை யையும் அத்தனையும் அன்றேநீத்தாள்
அகன்றாள் அகவிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

[சம்பந்தர் வீழிமிழலைப் பதிகம் பாடல்.]

விதிவழி மறையவர் மிழலை உளீர் நடம்
சதிவழி வருவதோர் சதிரே
சதிவழி வருவதோர் சதிர்உடையீர் உமை
அதிகுணர் புகழ்வதும் அழகே

காட்சி 9

[கொல்லி மழவன் மகளின் முயலகன் நோய் தீர்த்தல்.]

கொல்லி மலைச் சாரல் வாழ் மக்கள், தங்கள் குலப் பெருமை கூறி ஆடிப்பாடுகின்ற னர். அவர்களது தலைவன், தன் மகளை அழைத்துக் கொண்டு அங்கு வருகிறான். திடீ ரென அவளுக்கு முயலகன் நோய் தொத்து கிறது. அப்பெண், நினைவற்றுக் கீழே விழு கிறாள். மழவன் துடிக்கிறான். பாச்சில் என்ற ஊரில் உள்ள கோயிலின் முன் அப்பெண்ணை எடுத்துக் கிடத்துகிறான். அங்கு ஞானசம்பந் தர் வருகிறார். அவரைக் கொல்லிமழவன் வேண்டிக்கொள்ளச் சம்பந்தர், 'துணி வளர் திங்கள்' என்னும் பதிகம் பாடுகிறார். சிவபெரு மானின் அருளால் முயலகன் நோய் நீங்கிப் பெண் எழுகிறாள். கொல்லி மழவன், சம் பந்தரின் தாளில் வீழ்ந்து வணங்குகிறான்.

(கொல்லிமலை மக்கள் ஆடிப்பாடல்)

கானவர் ராகம்

கொல்லிமலைச் சாரலிலே கூடிநாங்கவாழ்ந்து வர்ரோம்
ஓடி வேட்டை ஆடிடுவோம் ஒளிஞ்சுமானைப் புடிச்சிடுவோம்
கரடிபுலி புடிச்சுவந்து குழந்தை எல்லாம் விளையாடும்
காட்டுப் பன்னி முரட்டுஆடு விரட்டி விரட்டி அடிச்சிடுவோம்
மலைத்தேனை இறக்கிடுவோம் மலைக்கூாம கள்குடிப்போம்
மழவரய்யா எங்கராசா எங்கராசா

[பெண்ணுடன் கொல்லி மழவன் வரு கிறான். பெண் மயங்கி விழ மழவன் வருந்து கிறான்.]

பூபாளம்— ஆதி [கண்டநடை]

மழவன்:

எம்பொண்ணுக் கென்னாச்சு காடா!
ஏனிவ இப்படி ஆன?
வள்ளியை நான் வேண்டிக் காடா! இவ்
வள்ளி பொறந்தாளே மாடா!
ஆசையாய் வளத்தேனே காடா! இப்போ
ஆர் செய்த ஏவலோ மாடா!
நெஞ்சம் துடிக்குதே காடா! நான்
என்னதான் செய்வேனோ மாடா!

காடன :

சிந்து பைரவி

முசலகன் தொத்திட்டான் மழவா நீ
முக்கண்ணு சாமியை வேண்டு!
மலைப் பொண்ணை மணந்தவ அவரு நம்
மலைப் பொண்ணைக் காப்பாத்துவாரு
பேச்சுமூச்சில்லாம கிடக்கா இவளை
பாச்சில் கோயில் முன்னே போடு

(சம்பந்தர் வர மழவன் வேண்டல்)

சாமி நீ எம்பொண்ணைப் பாரு
சாமியை வேண்டிக் காப்பாத்து

(சம்பந்தர் பாடல்)

பண் தக்கராகம்

ஆதி

துணிவளர் திங்கள் துளங்கி விளங்க
சுடர்ச் சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
ஆரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலம்எலாம் செய்து
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ! மங்கையை வாட
மயல்செய்வதோ இவர் மாண்பே.

காட்சி 10

[பாண்டிய மன்னனின் வெப்பு நோய் தீர்த்தல்]

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் நெடுமாறன், சமண சமயத்தைப் பின்பற்றி யிருக்கிறான். அவனது தேவி மங்கையர்க்கரசி சோழர் குலத்து உதித்தவள். சைவ சமயத்தை பின்பற்றியவள். அமைச்சர் குலச்சிறையாரும் சைவர். பாண்டிநாட்டில் சமணம் மேலோங்கி நிற்கிறது. அங்கு மீண்டும் சைவம் தழைக்கக் குலச்சிறையாரை அனுப்பிச் சம்பந்தரை மதுரைக்கு அழைக்கிறாள் மங்கையர்க்கரசி.

அங்கயற் கண்ணம்மையுடன் அமர்ந் துள்ள ஆலவாயண்ணலின் ஆலயத்துக்குச் சென்று மங்கையர்க்கரசி வணங்குகிறாள். மதுரைக்கு வந்த சம்பந்தரை அழைத்துக் கொண்டு குலச்சிறையாரும் கோயிலுக்கு வரு கிறார். சம்பந்தரைக் கண்டு மனம் மகிழ்ந்து மங்கையர்க்கரசி வணங்குகிறாள். சம்பந்தர், ''மங்கையர்க்கரசி'' என்னும் பாடல் பாடி அவள் வழிபடும் ஆலவாய் இதுவே என்று சிறப்பிக்கிறார். பின்னர் இருவரும் விடை பெற்றுக் கொள்ளுகின்றனர். சம்பந்தர், மதுரையில் ஒரு மடத்தில் தங்குகிறார்.

[ஆலவாயண்ணலின் கோயிலில் சம்பந்தர் மங்கையர்க்கரசியைச் சந்தித்துப் பாடல்.]

பண்: புறநீர்மை— ஆதி

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைமட மானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாள்தோறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாயாவதும் இதுவே.

காட்சி 11

பாண்டிய மன்னன் அரியணையில் அமர்ந் திருக்கிறான். சமணத் துறவி ஒருவர் ஓடி வரு கிறார். ''சைவ சமயத்தைச் சார்ந்த ஞான சம்பந்தன் என்னும் பாலன் ஒருவன் வந்துள் ளான். மதுரை மக்கள் எல்லாம் திருநீறு பூசிக் கொண்டு அவன் பின் ஓடுகிறார்கள். நமது அருகர் சமயத்துக்குக் கேடு வந்து விட்டது. நாங்கள் இதைக் ''கண்டு முட்டு'' என்று கூறு கிறார். நானும் இதைக் ''கேட்டு முட்டு'' என் கிறான் மன்னன்.

நம் சமயம் சிறக்க யாது செய்ய வேண்டு மோ அதைச் செய்யுங்கள் என்கிறான் அரசன்.

[பாண்டிய மன்னனிடம் சமணர் முறையீடு]

வசந்தா— ஆதி

சமணர்:

பாண்டி நாடுடை மன்னனே! நெடுமாறனே!
செவி கேட்டருள்
ஆண்டு ஓங்கிய ஆருகதர்க்கினி காலன்
வந்தனன் பாலனாய்
ஆலவாய் நகர் மாந்தருள் திருநீறு பூசிய
மேனியாய்
பாலன் பின்னரே ஏகுகின்றனர் கண்டுமுட்டிது
தென்னனே!

அரசன்:

யானிதைக் கேட்டுமுட்டிது கணியரே
இனி யாது செய்யினும் ஒப்புவேன்
ஏதமில் பணிஆதரே நீர்
தாழ்தலின்றியே செய்குவீர்

காட்சி 12

[சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்கு தீ இடல்.]

சம்பந்தர் இறங்கியிருந்த மடத்துக்கு யாருமறியாமல் சமணர், தீயிட்டு விடுகின்றனர் மடத்தில் தீப்பற்றி எரிகிறது. இது அறிந்த சம்பந்தப் பெருமான், 'செய்யனே திரு ஆலவா யுறை ஐயனே' எனும் பாடல் பாடி இங்கிட்ட தீ சென்று பாண்டியனையே பற்றட்டும் என் கிறார்.

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

கம்பரின் இராமாவதாரம்

டாக்டர் **த. அமிர்தலிங்கம்** **(29)**

தும்புரு கந்தர்வன், தன் சாபம் நீக்கிய இராமபிரானின் திருவடிகளைப் பணிந்து போற்றித் தன் கந்தர்வ லோகத்திற்கே புறப் பட்டுச் செல்கிறான். விராதனால் மிகவும் அச்சம் எய்திக் கலங்கியிருந்த சீதையை ஆசு வாசப்படுத்தி அவரை அழைத்துக் கொண்டு இராமலக்குவனர்கள் தம் பயணத்தைத் தொடர்கிறார்கள். சூரியன் அஸ்தமனமாகும் அந்தி நேரத்தில் தண்டகாரண்யத்தில் அமைந்து விளங்கும் சரபங்க முனிவர் தம் ஆசிரமத்தை அவர்கள் சமீபிக்கிறார்கள்.

காமம், வெகுளி, மயக்கமெனும் முக் குற்றங்களில் மற்ற குற்றங்களுக்கும் காரண மாகும் முதல் குற்றம் காமமே. அக்காமம் மிகுதிப்படுவது மன்மதனின் பாணத்தால். அத் தகைய மன்மதனின் பாணங்களைப் பங்க படுத்திக் காமத்தை வெற்றிகண்ட மாமுனிவர் சரபங்கர். அளவிலா யுகங்கள் ஐம்புலன்களை ஒடுக்கித் தவம் புரிந்திருக்கும் மகாதவசிரேட் டர் அவர்.

''ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார்
கோமான்
இந்திரனே சாலும் கரி''

என்று தவசியர் பெருமையை நம் தமிழ்மறை திருக்குறள் சாற்றும்.

நூறு அசுவமேதயாகம் புரிந்தவனும், தேவ மகளிர் ஆடலும் பாடலும் நாரதமுனிவரின் வீணை இசையுமாக காலத்தை எப்போதும் சுகமாக கழிப்பவனும், இராவணனாலும் ஊறு படுத்த முடியாத கூர்மிக்க வச்சராயுதத்தைக் கையில் கொண்டிருப்பவனுமான தேவேந்திரன் தன் பரிவாரங்களை விண்ணிலே நிற்கச் செய்து தான் ஒருவன் மட்டும் நான்கு கொம்புபடைத்த ஐராவத யானையில் சரபங்க முனிவர்தம் ஆசிரமத்திற்கு வந்து இறங்குவதைக் காணும் போது ஐந்தவித்தார் ஆற்றலே ஆற்றல் என் பதை நாமும் தெளிந்து கொள்கிறோம்.

தேவேந்திரனை வரவேற்று உபசரிக்கும் சரபங்கர், அவன் அவருடைய ஆசிரமத்திற்கு வருகை தந்த காரணத்தை விசாரிக்கிறார்.

இந்திரனும் 'மகாதவசி! எல்லா உலகிலும் சிறந்ததான தம் சத்திய லோகத்திற்கு பிரம்மா உங்களை அழைத்து வருமாறு எனைப் பணித் தார். பிரம்மதேவரே உங்களை எதிர்கொண்டு வரவேற்றுப் பெருமை செய்வார்'' எனத் தான் வந்த காரணத்தைக் கூறுகிறான்.

ஆயிரமாயிரம் யுகங்களாக பரம்பொரு ளின் திருவடிப் பேற்றிற்காகத் தவம் கிடக்கும் சரபங்கர், சத்தியலோகம் செல்வதற்கு உடன் படுவாரா என்ன? '' சுவர்க்க நாடுடைய தேவேந்திரா! பிரம்ம பதவியும், இந்திர பதவியுமே கிட்டுவதே யாயினும் அவற்றை நான் விரும்புவேன் அல்லேன். ஐம்பூதங்கள் அழிவுபடும் நாளிலும் அழிவுபடா பரம் பொருள் உலகை அடைவதே என் விருப்பம். மாறுபடுவதும், அழிந்துபடுவதுமான சத்திய லோக வாழ்வில் எனக்குச் சிறிதும் விருப்ப மில்லை'' என்று இந்திரனுக்குத் தம் மனக் கருத்தைத் தெளிவுபடுத்துகிறார் சரபங்கர்.

அற்பசுகங்களுக்கு ஆட்படாத கொள்கை உறுதி உடையவர்களுக்கே மேலான சுகம் கிட்டும் என்பது தெளிவு. பிரம்ம பதவியும், இந்திரபதவியும் நிலையற்றவை.

''நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்
ஏறுகங்கை மணல்எண்ணில் இந்திரர்''

எனவரும் திருமுறைப் பாடல் பகுதியைக் காண்க.

இதுகாறும் தோன்றித் தோன்றி மறைந்து போன பிரம்மாக்களின் எண்ணிக்கை நூறு கோடி அளவினதாகும். இந்திரர்களின் எண் ணிக்கையை அளவிட்டுக் கூறுதல் எளிதன்று; கங்கையாற்றின் இருகரையிலுமுள்ளமணல்கள் எத்தனை ஆயிரம் கோடியோ அத்தனைக் கோடி இந்திரர்கள் தோன்றித் தோன்றி மறைந்துபட்டு விட்டனர் என்று இப்பாட லில் திருநாவுக்கரசு சுவாமிகள் கூறியருளு கிறார்.

பிரம்மாவும், இந்திரனும் பரம்பொருள் ஆணைக்கு அடங்கிப் பணிபுரியும் ஏவலர்களே அல்லாமல் பரம்பொருள் ஆக மாட்டார்.

பானுகோபனை வதம்புரிந்த வீரவாகு தேவரின் வீரத்தைமெச்சிய முருகப்பெருமான் "யாது வரம் வேண்டும்?'' என அவருக்குத் திருவருள் புரிய வீரவாகுதேவர் பரம்பொரு ளான முருகப்பெருமானின் திருவடிப் பேற் றினையே வேண்டினார் என்பதைக் கந்த புராணம் கூறுகிறது.

'கோலம் நீடிய நீதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும்
[illegible] வெஃகேன்
மால்அயன் பெறுபதத்தையும் பொருளென
மதியேன்
சாலநின் பதத்தன்பையே வேண்டுவன்
தமியேன்''

என்று வீரவாகுதேவர் வேண்டியதைப் போலவே பற்றற்ற ஞானியர் பரம்பொருள் இன்பத்தையே என்றும் எண்ணியிருப்பர்.

சரபங்கமுனிவரும், சத்தியலோக வாழ்வும் தேவேந்திர போகமும் தமக்கு வேண்டாம் என இந்திரனுக்குத் தெளிவுபடுத்துகிறார். அதே நேரத்தில் அவர் விழையும் முத்திநிலையை அவருக்கு அவரிருக்கும் இடம் தேடிவந்து அருளும் அருளாளராக இராமபிரான் அவர்தம் ஆசிரமத்திற்கு எழுந்தருளுகிறார்.

ஒளிவிடும் கருப்புச் சூரியனை-ஒப்பற்ற நான்மறைக் கனியை தேவேந்திரன் தன் ஆயிரம் கண்களாலும் அள்ளிப் பருகுகிறான்.

''கண்தாம் அவை ஆயிரமும் கதுவக்
கண் தாமரை போல் கருணா யிறெனக்
கண்டான் இமையோர் இறை காசினியின்
கண்டான் அருநான் மறையின் கனியை''

என்று பாடுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

பரமபதத் திருமாலை தன் மணிமுடி அணிந்த தலையால் நாளும் வணங்கி மகிழ்ந்திருந்தவனான இந்திரன், அவர் வைகுந்தம் விட்டுப் பூவுலகிற்கு மானிட வடிவம் தாங்கி வந்தபின் வெகு காலமாகக் காணாதிருந்தான். அந்தத் தன் ஏக்கமெல்லாமும் தீர இராமபிரானின் திருவடிகளில் விழுந்து வணங்கி அவரைப் பக்தி மிகப்போற்றுகிறான் இந்திரன்.

பாற்கடலில் கண் வளர்ந்திருந்த பரம்பொருளான திருமால் கயமைக் குணம் கொண்ட தேவர்களைக் காக்கும் கடமையாகவே இராமாவதாரம் புரிந்துள்ளதையும், தம் திருவடிகள் நோகக்கொடுங் கானகம் வந்த அவர்தம் வான் கருணையையும் சொல்லிச் சொல்லி உருகுகிறான் தேவேந்திரன். இந்திரன் புறப்பட்டுச் சென்ற பிறகு சரபங்கர் இராமபிரானைத் தம் ஆசிரமத்திற்குள் அழைத்துச் சென்று அளவிலா மகிழ்வோடு உபசரிக்கிறார்.

அயோத்தியிலிருந்து வனவாசம் புறப்பட்ட நாள் முதலாக இலக்குவன் இரவு பகல் கண்ணுறக்கம் கொள்வதில்லை என்பதை முன்னரே கூறினோம். சரபங்க முனிவரின் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்த அன்றிரவு இராமரும் சீதையும்கூட கண் உறங்காமல் சரபங்க முனிவரின் ஞானோபதேசங்களைக் கேட்டு மகிழ்கிறார்கள். ''திருமகள் கேள்வ! பரம்பொருள் இறைவ! உமைத் தரிசிக்கும் ஏக்கத்தோடு தான் இத்தனை யுகங்களும் காத்திருந்தேன். நீங்களும் வந்தீர்கள். தரிசித்தேன்; என் வினைகள் யாவும் தீர்ந்தேன். இனி என்னை உம் பரமபதத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள்'' என்று வேண்டுகிறார் சரபங்கர். இருளாகிய போர்வையைச் சூரியன் தன் கிரணங்கள் எனும் ஒளி பொருந்திய வாள்களைக் கொண்டு உரித்தெடுக்கும் அதிகாலையில் சரபங்கர் எரியை மூட்டி அதில் தம் மனைவியோடும் ஆனந்தமாகப் புகுந்து பரமபதம் சென்று சேர்கிறார்.

திருமாலின் ஆயிர நாமங்களில் ஒன்றான இராமநாமத்தை ஜெபிப்பவர் அடையும் பாக்கியத்திற்குச் சரபங்கர் பரமபதம் சேரும் இவ்வரலாறு ஒரு கண் கூடான சான்று என்று புகழ்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். பரிசுத்தரான சரபங்கர் பரமபதம் சேர, இராமர், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் பல மலைகளையும் வனங்களையும் கடந்து வாலகில்ய முனிவர்கள் வசிக்கும் வனப்பகுதிக்கு வந்து சேருகிறார்கள்.

வாலகில்யமுனிவர்கள் அறுபதினாயிரம் பேரும் பிரம்மதேவரின் மானசபுத்திரர்கள். கட்டைவிரல் அளவே உயரம் உள்ள அவர்களும் பெரும் தவசிகளே. தாய்ப்பசு வரக் காணும் கன்றுகள் எப்படித் தாயைக் காணத் துள்ளிக் குதித்து ஓடிவருமோ அவ்வாறு வந்து இராமபிரானை வரவேற்று உபசரிக்கிறார்கள். இராமரைக் கண்டதும் கடலில் மூழ்க இருந்தவர்கள் தம்மை மீட்கும் மரக்கலம் காணப் பெற்றால் எவ்வாறோ அவ்வாறே தங்கள் மனக்கலக்கமும் தீரப் பெறுகிறார்கள்.

மறுநாள் காலையில் அவ்வறுபதினாயிரம் முனிவர்கள் எல்லோரும் மீண்டும் ஒன்று கூடி வந்து இராமபிரானிடம் தங்கள் மனக் கலக்கத்திற்குக் காரணமான அரக்கர்களைப் பற்றி எடுத்துக் கூறுகிறார்கள். ''தசரத சக்கரவர்த்தியின் பிரிய குமாரா! புலிகளிடம் அகப்பட்டுக் கொண்ட புள்ளிமான்களைப் போல நாங்கள் எங்கள் உயிருக்காகவே அஞ்சி நடுங்கிக் கொண்டு இருக்கிறோம். நாங்கள் வேதம் ஓதுவதையும், ஓதுவிப்பதையும் கூட அறவே மறந்து போனோம். தவஒழுக்கம் குன்றிப் போன எங்களுக்கு வீடுபேறு எப்படி கிட்டும்? இருளிலிருந்து எங்களை மீட்கும் கதிராக வந்த இராகவ! நாங்கள் அனைவருமே இனி உங்கள் அடைக்கலம்! அரக்கர்களிடமிருந்து எங்களைக் காத்து இரட்சிப்பது உம் கடன்' என்று இராமபிரானைச் சரணாகதி செய்கின்றனர்.

அபயமடைந்தோரை ஆதரித்தோம்பும் அருள் வள்ளலாகிய இராமரும், முனிவர்களுடைய அச்சம் அறவே நீங்கும் வண்ணம் உறுதி கூறியருளுகிறார். ''முனிவர்களே! என் தந்தை இறக்க, தாயரும், தம்பியரும், மக்களும் வருந்த நான் வனம் வர நேர்ந்ததே என்ற வருத்தம் இதுவரை எனக்கு இருந்துவந்தது!''

''உங்களைப் போன்ற தவசியருக்கு உதவ என் வனவாசம் இனி உதவப் போகிறது என்பதை எண்ணும்போது நான் செய்த புண்ணியப் பயனே இது என்பதாக உணர்ந்து ஆனந்தம் அடைகிறேன். உங்களுக்கு இன்னல் இழைத்த அரக்கர்கள் இவ்வண்ட கோளத்தில் இனி எங்கிருந்தாலும், அவர்கள் புற அண்டங்களுக்கு ஓடியே போய் ஒளிந்து கொண்டாலும், அவர்களை நான் வதைப்பேன். சூரர்களை வதைத்த முருகரும், திருமாலும், திரிபுரம் எரித்த சிவபெருமானும் அவ்வரக்கர்களுக்கு உறுதுணையாக வந்தாலும் அவர்களை வேரொடு மாய்ப்பேன். ஆக்கள், அந்தணர், எளியவர் இவர்களில் ஒருவரின் பொருட்டாக இறப்பாருக்கு அல்லவா-உரிமையுடையது வானவர் உலகம்? அவர்கள் தானே தேவர்களுக்கும் தேவர் ஆவர்'' என்று கூறி அபயம் அளித்தருளுகிறார் இராமபிரான்.

இராமரின் அருள்மொழிகளைக் கேட்டு வாலகில்ய முனிவர்கள் மகிழ்ச்சியால் தத்தம்

மாண்புமிகு முதல்வரின் மாதஊதியம்

''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற அருளாளர் அப்பர் வாக்கின்படி மக்கள் தொண்டுடன் மகேசன் தொண்டையும் மாண்புற ஆற்றும் நம் மாண்புமிகு முதல்வர் **செல்வி ஜெ. ஜெயலலிதா** அவர்கள் தம்மாத ஊதியமாக ரூபாய் ஒன்று மட்டுமே பெறப் போவதாக அறிவித்து உள்ளார்கள்,

---

திருத்தண்டங்களைச் சுழற்றி வீசி ஆனந்த தாண்டவமே ஆடுகிறார்கள். மூவுலகிலிருந்தும் அரக்கர்கள் இனி முப்பது கோடியினராக ஒன்று திரண்டு வந்தாலும் எங்களுக்கு அச்சமே இல்லை என்பதாகக் கூறி அம்முனிவர்கள் தங்கள் தங்கள் ஆசிரமங்களுக்குச் செல்கிறார்கள்.

இராமபிரான் தாம் செய்து தந்த சத்தியத்தின்படியே முனிவர்களுக்கு உறுதுணையாகப் பத்தாண்டுக் காலம் அத்தண்டகாரண்ய வனப்பகுதியில் வாழ்ந்திருக்கிறார். அவ்வப்போது தம் பர்ணசாலையை வேறு வேறு பகுதியாக மாற்றி அமைத்துக் கொண்டு காவல் புரிந்து அரக்கர் பயமின்றி, முனிவர்களைக்கண் இமை காப்பதுபோல காக்கிறார். இராவண வதம் காரணமாகவே இராமர் வனம் வந்திருக்கும் அவதார நோக்கத்தை அறிந்திருப்பவர்களான அம்முனிவர்கள் இராமரிடம் வந்து அகத்தியரை இராமர் தரிசித்து அவர்தம் ஆசி பெற வேண்டுமென்ற தம் விருப்பத்தைத் தெரிவிக்கிறார்கள்.

இராமரும் அவர்கள் விருப்பப்படியே அகத்தியரைத் தரிசிக்க சீதையுடனும் இலக்குவனனுடனும் புறபடுகிறார். செல்லும் வழியில் அகத்திய முனிவரின் சீடரான சுதீக்கண முனிவரைத் தரிசித்து அகத்தியரின் ஆசிரமத்திற்கு வழி கேட்டு அறிந்து கொள்கிறார்.

தமிழ்முனிவர் அகத்தியரை இராமபிரான் தரிசிக்கும் காட்சியை வர்ணிக்கும் பகுதியில் கவிச்சக்கரவர்த்தி கம்பர் தம் அளவிலாத் தமிழ்ப்பற்றைத் தெளிவாக்கும் வகையில் பல நயமான தமிழ்ப் பாக்களைப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. திருமால் தம் திருவடியால் பூவுலகை அளந்தவர்; அகத்தியர் அதே பூவுலகைத் தமிழால் அளந்தார். உலகை அளந்த இவ்விருவரும், உவகைக் கடல் பொங்க ஒருவரை ஒருவர் எதிர்கொண்டு தழுவி மகிழ்கிறார்கள் என்கிறார் கவிச்சக்கரவர்த்திகம்பர்.

''ஆண்டகையர் அவ்வயின் அடைந்தமை
அடைந்தான்
ஈண்டு உவகை வேலை துணை ஏழுலகம் எய்த
மாண்டவரதன் சரண் வணங்க எதிர் வந்தான்
நீண்ட தமிழால் உவகை நேமியின் அளந்தான்''

கையில் மழுவும் நெற்றியில் கண்ணும் நெருப்பு போன்ற சிவந்த மேனியும் கொண்ட சிவபெருமான் தமக்குத் தமிழ் மொழியை உபதேசிக்க அதை நூல்வழக்கு, உலக வழக்கு எனும் இருவகையாலும் ஆய்ந்து தமிழுக்குச் சிறந்ததோர் இலக்கணம் வகுத்தவரும் அகத்தியரே என்பதை

''உழக்குமறை நாலினும் உயர்ந்துலகம் ஓதும்
வழக்கினும் மதிக்கவையினும் மரபின் நாடி
நிழற்பொழி கணிச்சி மணி நெற்றியுமிழ்
செங்கண்
தழற்புரைசுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்''
என்று பாடுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

தெய்வத்தமிழ் தந்த அகத்தியமாமுனிவரைச் செந்தமிழ்க்கவியால் வாழ்த்தும் தமிழ் வாழ்த்து அல்லவா அமிழ்தினும் இனிய சுவையான அருந்தமிழ் வாழ்த்து! ''என்றுமுள தென்தமிழ் இயம்பி இசைகொண்டான்'' என்று தமிழோடு இணைத்து அகத்தியரைக் கம்பர் வாழ்த்தும் கவிதை இது.

''நின்றவனை வந்தநெடி யோன்அடி
பணிந்தான்
அன்றவனும் அன்போடுதழீஇயமுத கண்ணான்
நன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்தமிழ் இயம்பிஇசை
கொண்டான்',

இவ்வாறு தமிழுக்கு முதன் முதலாக இலக்கணம் கண்டு அதனை உயர்தனிச் செம்மொழியாய் வளர்த்த அகத்தியமாமுனிவரைத் தமிழோடு இணைத்தும் போற்றும் கவிச்சக்கரவர்த்திகம்பர் விருத்திராசுரவதத்திற்காக அவன் ஒளிந்து கொண்டிருந்த கடலை ஆசமனம் செய்து உண்டது, முனிவர்களுக்கு விருந்து படைத்து அவர்களை விருந்தாக்கி உண்ட வாதாபி வில்வலன் அரக்கர்களை வென்றது, சூரியனைத் தடுக்குமாறு வானுற வோங்கி வளர்ந்திருந்த விந்தியமலையைத் தம்பாதத்தால் மிதித்து பாதலத்தில் அழுத்தியது, சிவபெருமான் உமாதேவி திருக்கல்யாணத்தின் போது வடக்குப் பாரமிகுதியால் தாழ அதைச் சமப்படுத்தும் விதமாக இறைவர் ஆணையேற்றுத் தென்திசைக்கு வந்தது முதலான அகத்தியரின் அருஞ்செயல்கள் பலவற்றைப் பைந்தமிழ்ப் பாக்களால் உயர்வுறப் பாடிப் போற்றுகிறார்.

ஈசன் நிகராய் உலகு சீர்பெற இருந்த அகத்தியர் அருளால் அன்றோ நம் தமிழகம் தழைக்க காவிரி நதியும் பூவுலகில் உண்டாயிற்று. பூவுலகில் எவ்வுயிரும் தழைக்கப் புண்ணிய நதியாய் காவிரியைக் கமண்டலத்தில் கொண்டு வந்து சேர்த்த அகத்தியரின் அருஞ் சிறப்பையும் கவிச்சக்கரவர்த்தி கம்பர்

''கண்டனன் இராமனைவரக் கருணை கூரப்
புண்டரிக வாள்நயனம் நீர்பொழிய நின்றான்
எண்டிசையும் ஏழுலகும் எவ்வுயிரும் உய்யக்
குண்டிகையினிற் பொருவில் காவிரி
கொணர்ந்தான்''
எனப் பாடுகிறார்.

—தொடரும்

"மாண்புமிகு முதலமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி"

வருமானம் இல்லாத கோவில்களில் வழிபாடு நடத்துவதற்காகவும் பராமரிக்கவும் "முதல் அமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" என்ற நிதியை மாண்புமிகு முதல் அமைச்சர் **செல்வி ஜெ. ஜெயலலிதா** அவர்கள் அமைத்துள்ளார்கள். இதற்கு முதல் நன் கொடையாக 1 லட்சத்து 8 ரூபாயை அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

இதுகுறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் ஜெயலலிதா அவர்கள்வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறி இருப்பதாவது :

தமிழ்நாடு பழம்பெரும் கோவில்களின் உறைவிடம் ஆகும். ஆனால் ஆயிரக்கணக்கான சிறு கோவில்கள் சிதைந்த நிலையில் உள்ளன.

அவைகளில் பெரும்பாலானவற்றில் பல்லாண்டுக் காலமாக திருப்பணி வேலைகள் நடத்தப் படவில்லை. மேலும் பல கோவில்கள் அன்றாட வழிபாடுகூட நடத்த முடியாத வறிய நிலையில் உள்ளன.

இப்படிப்பட்ட கோவில்களுக்கு எந்த வகையில் நம்மால் உதவ முடியும் என்று நான் சிந்தித்து வந்தேன். இந்தக் கோவில்களுக்குத் திருப்பணி செய்யவும் அவற்றைப் பராமரிக்கவும் பெருந்தொகை தேவைப்படுகிறது.

இந்தச் சீரிய பணிக்கு பொது மக்களிடம் இருந்து நன்கொடையாக பொருளுதவி பெறுவது விரும்பத்தக்கதாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

இதன் அடிப்படையில் "முதல் - அமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" என்ற நிதியை ஏற்படுத்த தமிழ்நாடு அரசு தீர்மானித்து உள்ளது.

இந்த நிதிக்கு கொடை உள்ளம் படைத்தோர், தொழில் அதிபர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரும் நன்கொடை வழங்கலாம்.

சீரமைப்பு தேவைப்படும் சிறு கோவில்களில் திருப்பணியினை மேற்கொள்ளவும், அவைகளை நல்ல நிலையில் பராமரிக்கவும் இந்நிதி பயன்படுத்தப்படும்.

இந்நிதியில் இருந்து உதவிகோரும் கோவில்களுக்கு நிதி வழங்கும் அதிகாரம் பெற்றவர் தமிழ்நாடு முதல் அமைச்சர் ஆவார்.

அவ்வாறு உதவிபெறும் கோவில்களில் இந்தத் தொகை முறையாக பயன்படுத்தப்பட்டதா என்பதை சரிபார்க்கும் அதிகாரம் பெற்றவராக அரசின் வணிக வரி மற்றும் அறநிலையத்துறை செயலாளர் அல்லது இதற்கென முதல் அமைச்சரால் அங்கீகரிக்கப்படும் அலுவலர் செயல் படுவார்.

இந்த நிதிக்கு முதல் நன்கொடையாக நான் 1 லட்சத்து 8 ரூபாய் வழங்கி உள்ளேன்.

இந்த நன்கொடையோடு "முதல் - அமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி தொடங்கப்படுகிறது.

இச்சீரிய பணிக்கு தாராளமாக நன்கொடை வழங்குமாறு கொடையுள்ளம் கொண்டோ ரையும், தொழிலதிபர்களையும், பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் கூறியுள்ளார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

ஆத்திரம் கொள்ளும் அர்ச்சுனன் சிவவேடரை அணுகித் தன் வில்லின் தண்டத்தால் தலையில் ஓங்கி அடிக்கிறான்.
காண்டீபத்தின் அடி திருமால், பிரம்மா, இந்திரன் உள்ளிட்ட அனைவர் மேலும் பட்டு அர்ச்சுனன் மேலும் படுகிறது.
"என்ன மாயம் செய்தாய் வேடுவனே! வா என்னுடன் மற்போருக்கு" என்று அர்ச்சுனனைக் கரகரவெனச் சுழற்றி ஆகாயத்தில் வீசி எறிகிறார் சிவவேடர்.
தரையில் வந்து விழும் அர்ச்சுனன் பின்னும் தாவிக் குதித்துச் சிவவேடருடன் போருக்குச் செல்ல...
அர்ச்சுனன் வீரத்தை மெச்சி அவனுக்கு ரிஷபாரூடராகக் காட்சி கொடுக்கிறார் சிவபெருமான்.
"மூவா நான்மறை முதல்வா போற்றி! சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி போற்றி!"
அர்ச்சுனா! உனைக் கொல்ல வந்த மூகனை வதைக்கவே யாம் வேடுவராக எழுந்தருளினோம். இதோ நீ வேண்டித் தவம் புரிந்த பாசுபதாஸ்திரம் வெற்றி உனக்கே!

திருக்கழுக்குன்றத்தில் திருஞான சம்பந்தர் இசைவிழா மிகச் சிறப்புற நடைபெற்றது. ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ், ஐ. ஏ. எஸ்., அவர்கள் ஓதுவாமூர்த்தி கலைமாமணி சைதை நடராசன் அவர்களுக்குத் 'தேவார ஏழிசைத் தென்றல்' பட்டமும் நடராசர் படிமமும் தந்து பாராட்டினார்கள்.